Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 18 வெள்ளிக்கிழமை (31.01.2014) பக்கங்கள் 20 ஓசை – 122

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## நாகர்கோவிலில் குண்டுவெடிப்பு; "கலோரஸ்ட்" பணியாளர் காயம்



(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் கலோரஸ்ட் பணியுாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை, நாகர்கோவிலைச் சேர்ந்த கே. சயந்தன் (வயது - 22) என்ற கலோரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பணியாளரே காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இரு கைகளிலும் பலத்த

19 ஆம் பக்கம் பார்க்க

## உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு

## யாழ். தளபதி உதயபெரேரா உறுதி

(யாழ்ப்பாணம்)

மக்களின் நாளாந்த பிரச்சினைகளைத் தீர்க்கவும் விவசாயிகளின் உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கவும் எனது சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் செய்வதற்கு நான் தயாராக உள்ளதுடன், பிரச்சினைகள் இருப பின் அவற்றுக்கு தீர்வுகளை பெற்றுத்தருவேன் என்றும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதயபெரேரா தெரிவித்தார்.



யாழ். பலாலி படைமுகாமில் நேற்று முன்தினம் உதயபெரேராவுக்கும் யாழ். வலிகாமம் கிழக்கு விவசாயிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நீங்கள் என்னுடன் வெளிப்படையாக பேசுவதை நான்

19 ஆம் பக்கம் பார்க்க

# அரசியல் சாசன வரம்பை வடமாகாணசபை மீறிவிட்டது

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் அரசியல் சாசனத்தின் அதிகார வரம்புகளையும் வரன்முறைகளையும் முற்றாக மீறிச் செயற்படுவதற்கு வடக்கு மாகாணசபை முற்பட்டு வருகின்றது என்றும் எனவே இதை அரசு வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

வடமாகாணசபை அரசியல் சாசன அதிகாரத்தை மீறும் வகையில் வெளிப்படையாகவே செயற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கோரி வடமாகாணசபையின் அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென வடமாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், மாகாணசபைகளுக்கு சர்வதேச விவகாரங்களில் தலையீடு செய்ய அனுமதி எதுவும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தில் சர்வதேச விசாரணைகளை நடாத்துமாறு தீர்மானம் நிறைவேற்ற மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரங்களை மீறும் மாகாணசபைகளை கலைக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும்

19 ஆம் பக்கம் பார்க்க

10



பேச்சுவார்த்தை

18



மோதல்

## வடக்கு மாகாணசபையை அரசு கலைக்க வேண்டும்

### ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

வடமாகாணசபை கலைக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. மாகாணசபையை கலைக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை, ஜாதிக ஹெல உறுமய கட்சி நேற்றைய தினம் கோரியுள்ளது.

வடமாகாணசபையின் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி வடமாகாண சபையை கலைக்க நடவடிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண சபை செயலகம் மாங்குளத்தில் அமைவதே பொருத்தம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண சபை செயலகம் மாங்குளத்தில் இருப்பதுதான் பொருத்தம் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட சிலாவத்தை றோமன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அவுஸ்ரேலிய நிறுவனத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருமாடி பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முதலமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

வடமாகாண சபை முல்லைத்தீவு, மாங்குளத்தில் இருப்பது தான் எமது விருப்பமாகும். வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் மாங்குளம் தான் மத்தியகமாக உள்ளது. என்றாலும் அந்தப் பகுதியில் நிலத்திற்கு கீழ்

19 ஆம் பக்கம் பார்க்க

## புதைகுழியை தொடர்ந்தும் தோண்டப் பணிப்பு; மேலும் பல எலும்புக்கூடுகள் உள்ளதாக ஊகம்

### துண்டம் துண்டமாகவும் எலும்புகள் நேற்று மீட்பு

(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி 18 ஆவது தடவையாக நேற்று நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் தோண்டப்பட்டபோது அங்கிருந்து சிறு சிறு மனித எலும்புத்துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதுவரை 55 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலும் சில எலும்புக்கூடுகள் உள்ளமைக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து இன்று குறித்த மனிதப் புதைகுழியை தோண்ட நீதவான் உத்தரவிட்டார்.

அதேவேளை ஏற்கனவே மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் பெட்டிகளில் அடைக்கப்பட்டு பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

## பிரதம நீதியரசர் நேற்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் நேற்று யாழ். நீதிமன்றத்திற்கு விஜயம் செய்து அங்கு நடைபெற்ற வடமாகாண நீதவான்களுக்கான செயலமர்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



19 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் இந்திய மீனவர் அத்துமீறல்; நெடுந்தீவில் ஆறு படகுகள் சிக்கின

### 38 மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழில் ஈடுபட்ட 6 இந்திய மீன்பிடி இழுவைப் படகுகள் இலங்கை கடற்படையினரினால் பிடிக்கப்பட்டு அதிலிருந்த 38 இந்திய மீனவர்களும் யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரியிடம் நேற்றுக்காலை ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.


நேற்று முன்தினம் இரவு இவ்வாறு அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட இந்த ஆறு இழுவைப் படகுகளையும் பிடித்த கடற்படையினர் மீனவர்களை கரைக்கு கொண்டுவந்து யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ந.கணேசமூர்த்தியிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த இந்த மீனவர்களுக்கு உணவு, உடை உட்பட அத்தியாவசிய தேவைகளை ஏற்படுத்திக் கொடுத்த திணைக்கள அதிகாரி இந்திய துணைத்தூதரகத்திற்கும் தெரியப்படுத்தியதனை அடுத்து தூதரக அதிகாரிகளும் மீனவர்களைப் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

### நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில்

# மகிந்தோதய ஆய்வுகூட கட்டடம் இடைநடுவில் நிற்பதாக கவலை.



நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுவரும் மகிந்தோதய ஆய்வு கூட கட்டடப்பணிகள் இடைநடுவில் நிற்பதாக வித்தியாலய அதிபர் திருமதி எஸ்.கிருஸ்ணதாஸ் கவலை வெளியிட்டுள்ளார்.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் தரம் உயர்வு பெற்றதுடன், மகிந்தோதய ஆய்வுகூடம் ஒன்றினையும் எமது வித்தியாலயம் பெற்றிருக்கின்றது. எனினும் அதன் ஆரம்ப கட்டடப்பணிகள் ஆரம்பமாகியும் மிகுதிப்பணிகள் நின்றுவிட்டன. இது குறித்து கட்டட ஒப்பந்தகாரர்கள் எந்தவிதமான பதிலும் குறிப்பிடாத நிலையில் பணிகள் தொடரப்படாது இழுத்தடிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் ஆய்வு கூடங்களைப் பெற்ற அனைத்து பாடசாலைகளிலும் கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், திறப்பு விழாவுக்காக காத்திருக்கின்றன. ஆனால் எமது பாடசாலையின் பணிகள் மட்டும் ஏன் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக புரியவில்லை என வித்தியாலய அதிபர் கவலை வெளியிட்டார். (இ)

# "யூப்பிட்டர்" கல்விநிலைய பரிசளிப்பு நிகழ்வு

(கைதடி)

கைதடி யூப்பிட்டர் கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய இயக்குநர் திருமதி லனிதா மதியழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கைதடி வடக்கு கயிற்றசிட்டி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற உள்ள நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை கலந்து கொள்ள உள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி சேதுகாவலர் வித்தியாலய முதல்வர் திருமதி இ.திருஞானசிவம், மட்டுவில் கிராம அலுவலர் க.வாமதேவன், அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை உத்தியோகத்தர் இ.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட விருந்தினராக நிலையத்தின் பழைய மாணவர்களான சுவிஸ் நாட்டில் வசிக்கும் சுதன், தாரணி தம்பதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஆசிரியைகளான திருமதி ச.தபேந்திரன், திருமதி வி.ஈஸ்வரன், திருமதி.கே.செல்வநாயகம், திருமதி.சி.கௌரிதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மாணவர்களுக்கு பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (90)

### காது, மூக்கு, தொண்டை சிகிச்சை

# 7 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் பெற்றோரை சமுகமளிக்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் குறைந்த அல்லது அற்ற, வாய் பேச முடியாத பிறப்பிலிருந்தோ அல்லது இடையிலிருந்தோ 7 வயதிற்கு குறைந்த பிள்ளைகளின் பெற்றோர் யாழ்.போதனா வைத்திய சாலை காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப்பிரிவுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணியிற்கு இடையில் தவறாது சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

வருகைதரும்போது பிள்ளை சம்பந்தப்பட்ட கிளினிக் கொப்பி, பரிசோதனை பெறுபேறுகளை எடுத்துவரவேண்டும். மற்றும் காது கேட்கும் உபகரணங்களை (Hearing Aid) உபயோகிக்கும் 7 வயதிற்குட்பட்ட சிறுவர்களும் சமுகமளிக்கவும்.

மேலதிக சிகிச்சைகள் பற்றிய ஆலோசனைகள் அன்றைய தினம் வழங்க ஏற்பாடாகியுள்ளது. நேரில் வரமுடியாதவர்கள் மாத்திரம் யாழ். போதனா வைத்தியசாலை காது, மூக்கு, தொண்டைப் பிரிவுடன் 021 222 2261 அல்லது 021 222 2301 என்ற இலக்கத்திற்கு அழைத்து 243 என்ற இலக்கமூடாக தொடர்புகொள்ளலாமென பதில் பணிப்பாளர், மருத்துவர் கே.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

# பதிவுத்திருமணம் செய்து மாணவியை கடத்த முயற்சி

கோம்பாவில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 18 வயது மாணவியை திருமணம் செய்வதாக கூறி ஏமாற்றி பதிவு திருமணம் செய்துவிட்டு அம்மாணவியை படிக்கவிடாது துன்புறுத்தி கடத்திச் செல்வதாக கூறி பயமுறுத்தியதாக கூறி அம்மாணவி ஆணைக்குழு மூலமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

மேற்படி நபர் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்யுமாறும், பிரதிவாதிக்கு அழைப்புக்கட்டளை ஒன்றையும் பிரிவாதி மாணவியுடன் எவ்வித தொடர்பையும் பேணக்கூடாது எனவும், துன்புறுத்தக் கூடாது எனவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபர் மாணவியை கடத்தி செல்ல முற்பட்டதாகவும் அதனால் மனநிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றில் மாணவி தெரிவித்தார். (170)

# சாவகச்சேரி இந்துவின் நிறுவுனர் தின நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நிறுவுனர் தின நிகழ்வும், 'தாமோதரன்' மலர் வெளியீடும் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் அருணாச்சலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் முதல்வர் அ.கைலாயப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கட்டிளமைப்பருவத்தினரை சுய கற்றலில் ஈடுபடுத்தத்தக்க உத்திகள் என்னும் தலைப்பில் ச.லலீசன் உரையாற்றவுள்ளார்.

'தாமோதரன்' மலரினை பிரதம விருந்தினர் வெளியிட ஹற்றன் நஷனல் வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் பா.பரணிதரன் பெற்றுக்கொள்ளவுள்ளார். ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசு வழங்கவுள்ளார். (11)








அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரனின் (ஜெகன்) பிரதிநிதியாக முன்னாள் யாழ். மாநகரசபை பிரதிமேயரான இளங்கோ (றீகன்) நேரடியாகச் சென்று கொழும்புத்துறை 5 ஆம் குறுக்குத்தெருவில் புனரமைக்கப்படும் மதகினைப்பார்வையிட்டார்.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கொழும்புத்துறை, மணியந்தோட்டம் ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்த போது இவ்விடத்தினை நேரடியாகப் பார்வையிட்டதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு இவ்மதகினை புனரமைக்கும்படி கூறினார். இத்திருத்தப் பணிக்காக 60 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2500 திகதி 29-01-2014

ஆங்கில எழுத்து: I

வெற்றி எண்கள்: 31 51 65 68

போனஸ் இல: 04

ஜக்பொட் பரிசு ரூ.12,958,825/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 256120 | 20/- | 5,122,400/- |
| 2 இல | 18318 | 100/- | 1,831,800/- |
| 3 இல | 383 | 1,000/- | 383,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10049 | 40/- | 401,960/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 670 | 1,000/- | 670,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,958,825/- | - |
| 1 இல + போனஸ் இல | 12206 | 100/- | 1,220,600/- |
| 2 இல + போனஸ் இல | 555 | 500/- | 277,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 450 | 200/- | 90,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 298786 | | 11,732,760/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.02.01 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 13,657,300/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3266)

# ஒன்றுபட்டு செயற்படவேண்டியது ஜனநாயகத்துக்கு அவசியமானது

## யாழில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(யாழ்ப்பாணம்)



இலங்கையைப் பொறுத்த வரை வேறுபாடுகள் என்பது காலங்காலமாகக் காணப்படுகிறது. எனினும் இந்த வேறுபாட்டைக்களைந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டியதுதான் ஜனநாயகத்திற்கு அவசியமானது. மொழி, இனம், மதம் என பாகுபாட்டை மறந்து எமது நாட்டின் ஒற்றுமைக்காக பாடுபடவேண்டும். மாகாண அரசும் மத்திய அரசும் ஒன்றுபட்டுச் செயற்படுமாயின் அதுவே ஒற்றுமையின் அடித்தளமாக விளங்கும் என தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

2013 இன் இறுதிக்காலப் பகுதியில் அரச கரும ஆணைக் குழுவினால் நடாத்தப்பட்ட வட மாகாணத்தில் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விவாதப்போட்டித் தொடரில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் வெற்றி கேடயம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மாகாண அரசும் மத்திய அரசும் ஒன்றுபட்டு செயற்படுமாயின் அதுவே ஒற்றுமையின் அடித்தளமாக விளங்கும் எனத் தெரிவித்ததுடன் வடமாகாணத்தில் தமிழ் மொழியும் தென் மாகாணத்தில் சிங்கள மொழியும் நாடுபூராகவும் தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளுமே அதிகம் பேசப்படுகிறது எனவே தான் இதய பூர்வமாக நம் ஒவ்வொருவரிடையே சமத்துவம் நிலவ வேண்டுமாயின் மொழி என்ற பிரிவினையை மறந்து அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டால் நாடு சுவீட்சமடையும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை என அவர் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களின் இணைப்பிலான விவாத அரங்கு, மொழிப் பிரச்சினையால் இலங்கை துண்டாடப்பட்டு இருப்பதை விபரிக்கும் நாடகமும் ஆற்றுகை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண பாடசாலை மட்ட விவாதப்போட்டியில் தெரிவாகி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வெற்றிக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு அரசமொழி ஆணைக்குழுவின் செயலாளர் ஜயசிங்க, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பாலசுந்தரம்பிள்ளை பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் பார் வையாளர் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (63,பா)

# பூர்த்தியடையும் நிலையில் புகையிரத நிலையப்பணிகள்

(கொடிகாமம்)

கொடிகாமம் புகையிரத நிலைய புனரமைப்புப் பணி துரித கதியில் நடைபெற்றுவருகின்றது. கொடிகாமம் புகையிரதநிலையமானது பழைய இடத்தில் அமைக்கப்பட்டது புதிய இடத்தில் நவீன முறையில் அமைக்கப்பட்டுவருகின்றது. மேலும் தற்பொழுது ஒளி சமிக்ஞைகள் பொருத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை மீசாலை புகையிரத நிலையம் அமைக்கும் பணி கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பழைய பாதைகள் அகற்றப்பட்டு புதிய புகையிரத இறங்கு பாதை அமைக்கும்பணி வேகமாக நடை பெற்றுவருகின்றது. மிருசுவில் புகையிரத நிலையம் கடந்த பல மாதங்களிற்கு முன்பே புனரமைக்கப்பட்டுஉள்ளமை குறிப்பிடத் தக்கது. (130)

# மீசாலை அல்லாரை வீதியை புனரமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட மீசாலை அல்லாரை வீதியினை புனரமைப்புச் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீசாலைச் சந்தியில் இருந்து அல்லாரை ஊடாக கச்சாய் சந்தி வரை 4 கிலோமீற்றர் நீளமான வீதி கடுமையாக சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இந்த வீதியினை அல்லாரை, கொடிகாமம் தெற்கு, மீசாலை கிழக்கு, வெள்ளாம்போக்கட்டி, கெற்பேலி, பாலாவி முதலான கிராமங்களைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றன. மேலும் இந்தப் பகுதியூடாக தனியார் சிற்றூர்திச் சேவையும் இடம்பெறுகின்றது.

பாதை சீரின்மையால் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மீசாலை அல்லாரை வீதியினை புனரமைப்புச் செய்து தருமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# டெங்குதொற்று ஒருவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

டெங்குத்தொற்றிற்கு இலக்காகிய மேலும் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தே இவர் அனுமதிக்கப்பட்டிருப்பதாக யாழ்.போதனாவைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (பா)

# ஆசிரிய ஆலோசகர் சங்க அவசர பொதுக்கூட்டம்

(வலிகாமம்)

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் அவசர பொதுக்கூட்டம் கொழும்பு நுகேகொடை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நாளைமறுதினம் மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளதாக அதன் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆசிரிய ஆலோசகர்களை, ஆசிரிய ஆலோசகர் சேவைக்குள் உள்வாங்குவது தொடர்பாக இக் கூட்டத்தில் முக்கியமாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்க உறுப்பினர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அதன் பொதுச்செயலாளர் என்.பி. ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்க உறுப்பினர்கள் 077 9603001 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தலைவர் செயலாளர்களுடன் இணைந்து மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)




**இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் யாழ்ப்பாணத்திற்கான புகையிரத பாதை அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. இதன்போது தண்டவாளங்களைப் பொருத்தும் கனரக தொழில்நுட்ப வாகனம் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் தண்டவாளங்களை நேற்று முன்தினம் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.**

**(படம்: ஆர்.இராஜகுமார்)**

# நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் விளையாட்டரங்க கட்டடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)



நெடுந்தீவு மகாவித்தியாலத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டரங்கு கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர்களின் நிதியுதவியுடனும் இலங்கை கடலோரக் காவல்படையின் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜய குணரட்ணவின் நிதியுதவியுடன் வித்தியாலய மைதானத்தில் 10 இலட்சம் ரூபா செலவில் அரங்கக்கட்டடம் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டிநிகழ்வின் ஆரம்பத்தில் இக்கட்டடத் தொகுதியின் திறப்புவிழா பாடசாலையின் அதிபர் திருமதி எஸ். கிறிஸ்னதாஸ். தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட இலங்கை கரையோர காவல் படையின் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜய குணரட்னவும் யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி உதயபெரேரா ஆகியோர் நாடா வெட்டி கட்டடத்தை திறந்து வைத்தனர்.

இதில் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வில் சாதித்த மாணவர்களுக்கு கேடயங்களும், பாடசாலைக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டதுடன் பாடசாலையின் அதிபரினால் பிரதம விருந்தினர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. (இ)

# கீரிமலை நகுலேஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவம்

கீரிமலை நகுலேஸ்வரம் அருள்மிகு நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரசுவாமி கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாட்களுக்கு திருவிழா நடைபெறவுள்ளது. திருவிழாக் காலத்தில் தினமும் முற்பகல் 10.30 மணிக்கு கொடித்தம்ப பூஜையும் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் மாலை 5 மணிக்கு கொடித்தம்ப பூஜையும் 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெறவுள்ளன.

பெப்ரவரி 27ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. அதேதினம் இரவு மஹாசிவராத்திரி அனுஷ்டிக்கப்படவுள்ளது. 28ஆம் திகதி கண்டங்கி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளின் கல்லூரி மாணவ, மாணவிகளின் நற்சிந்தனை, கூட்டுப் பிரார்த்தனை, திருமுறைப் பாடல்கள், இசை, நடனம் ஆகியன திருவிழாக் காலத்தில் நடைபெறவுள்ளன. (48)

யாருடன் பழகினாலும் அந்தஸ்து பார்க்காமல் ஒரே மாதிரியான அணுகுமுறையுடன் உள்ளன்பு குறையாமல் பழகுங்கள்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## உயிர் வளர்க்க உடல் காத்தல்!

முன்பெல்லாம் மனிதர் வாழ்க்கையில் உழைப்பு அதிகமாக இருந்ததால் நீரிழிவு, இரத்தக் கொதிப்பு போன்ற நோயின்றி இருந்தனர். தற்போது 35 வயதைத் தாண்டியவர்களில் பெரும்பாலானோர் இரத்தக் கொதிப்பு அல்லது நீரிழிவு நோய் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்கிறது ஓர் ஆய்வு.

அலுவலகத்திலும், வீட்டிலும் அதிக "பதற்றமாக" காணப்படும் பலருக்கு இரத்தக் கொதிப்பு நோய் ஏற்பட்டுவருகிறது. புரதச் சத்தில்லாத உணவைச் சாப்பிடுபவர்கள் பலர் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

இவற்றிலிருந்து தப்ப அதாவது – நோய் கூடுதலாகாமல் கட்டுப்படுத்த – மருத்துவர்கள் கூறும் அறிவுரை.. வாழ்நாள் முழுவதும் மருந்தும் நடைப்பயிற்சியும்.

அன்று நம்மைக் கண்டு "நோய்" பயந்து ஓடியது. இன்று அப்படியில்லை, நோயைக் கண்டு நாம் பயந்து "ஓடி"க் கொண்டிருக்கிறோம் – நடைப் பயிற்சி, ஓட்டப் பயிற்சி என்று ஏதாவது ஒரு வடிவில்.

நமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் உடல் உழைப்புதான் பிரதானமாக இருந்தது. அன்று போக்குவரத்து நடைப்பயணமாகவே இருந்தது. இன்று சிறிது தொலைவு செல்ல வேண்டும் என்றால் இரு சக்கர வாகனங்களையும், பஸ்ஸையும் நம்பியிருப்பதாகி விட்டது.

உடலுக்குப் பயிற்சியைத் தரும் சைக்கிள்களும் கூட அரிதாகி வருகிறது. உடலுழைப்பு வேலைகளை மறந்துவிட்டதால் உடல் தளர்ந்து மூட்டுகளில் வலி ஏற்பட்டு கை – கால்களில் வலு இழந்து வருகிறது.

"எனக்கு எவ்வித நோயும் கிடையாது, மருந்துகள் உண்பது கிடையாது" என்று கூறுபவர்களை இன்று விரல்விட்டு எண்ணி விடலாம்.

வேகமாக வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்பத்துடன் சேர்ந்து 24 மணி நேரத்தில் 8 மணி நேரம் அல்லது 10 மணி நேரம் உழைப்பதாகச் சொல்கின்றோம். நாற்காலியில் அமர்ந்தபடி கணனியில்ும், மடிக் கணனியிலும், செல்பேசியில் பேசியபடியும் வேலை பார்ப்பது எப்படி உடல் உழைப்பாகும்?

நாற்காலியில் அமர்ந்தபடியே பணியில் ஈடுபடும் நம்மால் தினமும் உண்ணும் உணவுகூட சமிபாடடைவதற்கு நேரம் கொடுப்பதில்லை. கதிரையில் இருந்தபடியே அதற்குள் அடுத்த உணவுவேளை வந்து விடுகிறது. மீண்டும் உணவை முடித்துவிட்டு கதிரையில் வேலை.

உடல் உழைப்பு என்பது காணாமல் போய்விட்டது. ஒரு மனிதன் 24 மணி நேரத்தில் 6 மணி நேரம் தூக்கத்திற்கும், 8 மணி நேரம் உழைப்புக்கும் 2 மணி நேரம் அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒதுக்க வேண்டும். மீதியுள்ள நேரத்தில் கவலைகளை மறந்து குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

ஆனால், உழைக்கிறோம் என்ற மாயையை உருவாக்கி, சரியான திட்டமிடல் இன்றி பல மணி நேரத்தை வீணாக்கி விட்டு, தூங்கும் நேரத்தை குறைத்துக் கொள்கிறோம். இதனால் நோய் நம்மை ஆக்கிரமித்துக் கொள்கிறது.

ஆகவே, சரியான முறையில் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, எளிய உடற்பயிற்சியுடன் இயற்கை தரும் சத்தான உணவுகளை உண்பதுடன், திட்டமிட்டு வாழ்க்கையை வாழ்ந்தால் நோய்களை நாமும் வெல்லலாம்.

உடல் வளர்த்து உயிர் வளர்ப்போம்! - ஆசிரியர்.

# போதைப்பொருள் வர்த்தகத்தை சர்வதேச உதவி மூலம் ஒழிக்கலாம்

## எதிர்க்கட்சித் தலைவர் ஆலோசனை

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்தகத்தை தடுத்து நிறுத்த சர்வதேசத்தின் உதவிகளை பெற்றால் குறுகிய காலத்தில் அதனை நாட்டில் இருந்து ஒழித்து விட முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசாங்கத்திற்கு எதிரான கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச வைத்தியசாலைகளில் இலவசமாக மருந்துகளை பெற முடியாதுள்ளது. அரசாங்கம் இலவச மருத்துச் சேவையை முற்றாக அழித்துள்ளமை இதன் மூலம் தெளிவாகியுள்ளது.

மருத்துவப் பரிசோதனைகளை தனியார் மருத்துவமனைகளிலும் மருந்துகளை தனியார் மருந்தகங்களிலும் பணத்தை கொடுத்து பெற வேண்டிய நிலைமை நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

போதைப் பொருள் வியாபாரத்திலேயே இன்றைய அரசாங்கத்தின் இருப்பு தங்கியுள்ளது. போதைப் பொருள் வியாபாரத்தை நிறுத்தினால், இந்த அரசாங்கம் கவிழ்ந்து விடும்.

விபசார தொழிலில் கைவைததுள்ள அரசாங்கம், அந்த தொழிலை விரிவுபடுத்துவதற்காக வரிச் சலுகைகளையும் வழங்கியுள்ளது என்றார்.

# அரசாங்கம் எந்த நிறுவனத்தையும் தனியாரிடம் கையளிக்கவில்லை

## மத்திய மாகாணமுதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் எந்தவொரு நிறுவனத்தையும் தனியாருக்கு கையளிக்கவில்லை. மாறாக ஏற்கனவே தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்தியமாகாண சபை ஒன்றில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சி.டபிள்யூ டபிள்யூ கன்னங்கர அறிமுகப்படுத்திய இலவசக் கல்வி முறைமையைத் தொடர்ந்து கிராமப் பகுதிகளிலும் மகா வித்தியாலய அந்தஸ்துடனான பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

இதன் காரணமாகத் தான் இந்த நாட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மாத்திரமே திறக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகக் கதவுகள் மிகவும் பின் தங்கிய கிராமப்புறத்து வறுமை வாய்ப்பட்ட மாணவர்களுக்கும் வழிவிட்டன. அன்று உருவான கல்விப்புரட்சி இன்று மகிந்த ராஜபக்ஷ யுகத்தில் மீண்டும் புதிய உத்வேகத்துடன் தலை தூக்க ஆரம்பித்துள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறுவது தோல்வியடைவது அதன் மூல சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்வது என்ப மாத்திரமே ஒரு பிள்ளையின் திறமைய கணிப்பிடும் கருவியல்ல.

ஐந்தாம் தரத்துக்குப்பிறகு 6 ஆம் தரத்திலிருந்து தனது கல்வியைத் தொடர சகல பிள்ளைகளுக்கும் உரிமையுண்டு. 6 ஆம் தரத்துக்குப் பிறகு தாம் விரும்பும் துறையில் தமது கல்வியைத் தொடரக்கூடிய வாய்ப்பை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஜனாதிபதி உருவாக்கிக் கொடுத்துள்ளார் என்றார்.

# 8 பிரதேச சபைகளுக்கு புதிய தவிசாளர்களை நியமிப்பதற்கு நீதிமன்றம் தடை விதிப்பு

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்ட 8 பிரதேச சபைகளுக்கு புதிய தவிசாளர்களை நியமிக்கவோ நீக்கவோ வேண்டாமென உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்ட எட்டு பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போதே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான சந்ரா ஏக்கநாயக்க, சத்தியா ஹெட்டிகே, ரோஹினி மாரசிங்ஹ ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது மாத்தறை, கெஸ்பேவ மற்றும் புளத்சிங்கள ஆகிய பிரதேச சபைகளுக்காக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தவிசாளர்கள் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி வரை குறித்த பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

ஹோமாகம பிரதேச சபையின் தவிசாளர் தொடர்ந்தும் அந்தப் பதவியில் செயற்படுவதற்கு இதற்கு முன்னர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதால், அவர் தொடர்ந்தும் அந்தப் பதவியில் நீடிப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

ஹிங்குராக்கொட, இம்புல்பே. தமண மற்றும் ஹங்குரா கெத்தை ஆகிய பிரதேச ச களின் வரவு செலவுத்திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அந்த பிரதேச சபைகளின் நடவடிக்கைகள் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட முறைமை தொடர்ந்தும் பின்பற்றப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இந்த அனைத்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

# துறைமுகங்களுக்கு விமானங்கள் வந்தால் தான் செய்தியாகலாம்

## ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் கிண்டல்

(கொழும்பு)

துறைமுகத்திற்கு கப்பல் வந்தால் அது எப்படி செய்தியாக முடியும். விமானங்கள் வந்தால் செய்தியாக வெளியிடலாம் என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். காலி பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கப்பல்கள் வருவதில்லை. கப்பல்கள் வந்தால் அது செய்தியாகும். துறைமுகத்திற்கு கப்பல்கள் வருவது அரிது இதன் காரணமாகவே கப்பல் ஒன்று வந்தால் அதனை செய்தியாக வெளியிடுகின்றனர்.

மக்களுக்கு பல்வேறு பொருட்களை விநியோகித்து அவர்களின் வாக்குகளை கொள்ளையிடும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. கடனை வாங்கி நாட்டை அபிவிருத்தி செய்வதாக அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கம் நாட்டில் எந்த அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளது? எனத் தெரியவில்லை.

மத்தளவில் விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அங்கு விமானங்கள் இல்லை. விமானங்களுக்குப் பதிலாக மயில்கள் பறக்கின்றன. இலங்கை பொறியியலாளர்களும் தொழிலாளர்களும் அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்கின்றனர்.

சீனா மேலோட்டமாக செயற்படுகிறது. ஆனால் சீனா இந்த அபிவிருத்திக்காக கடனை கொடுத்துவிட்டு, அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தங்களைப் பெற்று மீண்டும் பணத்தை தனது நாட்டுக்கு எடுத்துச் செல்கிறது என்றார்.

# பேச்சுவார்த்தை மூலமான தீர்வில் இனியேனும் கவனம் செலுத்தவேண்டும்



## என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து

**அரசாங்கம் மற்றும் ரி.என்.ஏ ஆகிய இரு தரப்பும் ஒருங்கிணைந்து வேற்றுமைகள் மற்றும் செயல்முறைகள் போன்றவற்றை சரி செய்ய முயலவேண்டும். ரி.என்.ஏ கூட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தினூடாக நிறைவேற்றிக் கொள்ளவேண்டியது முற்றிலும் அரசாங்கத்தின் கடமை என்று கூறி, இந்த நடவடிக்கையில் ஒரு வெளியாள் போல விலகி நிற்க முடியாது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இரு தரப்பினரும் தீர்ப்பதற்கு முயற்சித்த பரஸ்பர பிரச்சினைகள் மற்றும் கவலைகள் பற்றிய சில தெளிவுகளை வரைவு செய்திருக்க வேண்டும் – அது வெற்றிகரமாக நடந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்கூட. அந்த வழியில்தான் உலகெங்கிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.**

ரி.என்.ஏ பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தனுக்கும் மற்றும் அந்தக் கட்சியின் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் "எனது கரங்களைப் பற்றிக்கொண்டு நல்லிணக்கப் பாதையில் நடை போட வாருங்கள்" என்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ குரல் கொடுத்து இரண்டு வாரங்களுக்கு மேலாகியும், அரசு அந்த நோக்கத்தை இலக்கு வைத்து மேற் கொள்ள வேண்டிய யதார்த்த மானதும் மற்றும் நடைமுறைக் கேற்றதுமான முயற்சிகளை இன்னமும் வெளிக் கொணர வேண்டியுள்ளது. இதற்கிடையில் விக்னேஸ்வரனும் தனது துயரங்களின் பிரார்த்தனைகளையும் கூறி ஜனாதிபதிக்கு அழைப்பும் விடுத்திருந்தார். அவை அனைத்தையும் இனப்பிளவுக்கு ஆதாரமற்ற மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத அம்சங்கள் எனத் தள்ளிவிட விடமுடியாது.

தேசிய இனங்கள் அல்லது மற்றவற்றுக்கு இடையேயான அரசியல் பேச்சு வார்த்தைகளின் வெற்றி அல்லது தோல்வி, பரஸ்பரம் நீடித்து நிலைக்கும் நம்பிக்கைகளை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் வெற்றி அல்லது தோல்வியிலேயே தங்கியுள்ளது. இந்த விடயத்தை பொறுத்தவரை முதலமைச்சர் விக்னேஸ்வரனின் சத்தியப் பிரமாண நிகழ்வுக்கு ஜனாதிபதி ராஜபக்ஸவுக்கு அழைப்பு விடுத்ததின் மூலம் ரி.என்.ஏ சரியான செயலையே செய்துள்ளது. அது ரி.என்.ஏ யின் கடமை, ஆனால் இந்த ஒரு விடயத்தோடு மட்டும் ரி.என்.ஏ இரட்டையர்கள் கிட்டத்தட்ட தனியாக நின்று சத்தியப் பிரமாண சர்ச்சையில் தமிழ் சமூகம் மற்றும் செல்வாக்குள்ள புலம்பெயர் சக்திகள் என்பனவற்றுக்குள் ஏற்பட்டுள்ள பிரதானமான உணர்வுகளுக்கு வேலி போடுவதை நிறுத்திவிட முடியாது.

மேலும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வலியுறுத்தியபடி,

**அரசாங்கம் மற்றும் ரி.என்.ஏ ஆகிய இரு தரப்பும் ஒருங்கிணைந்து வேற்றுமைகள் மற்றும் செயல்முறைகள் போன்றவற்றை சரி செய்ய முயலவேண்டும். அப்போதுதான் ரி.என்.ஏ கூட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தினூடாக நிறைவேற்றிக் கொள்ளவேண்டியது முற்றிலும் அரசாங்கத்தின் கடமை என்று கூறி, இந்த நடவடிக்கையில் ஒரு வெளியாள் போல விலகி நிற்க முடியாது.**



உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் தீர்வு என்கிற அம்சத்தில் அரசாங்கம் தீவிரமாக இருந்தால், அதில் ஒரு சிறிய விடயத்தையாவது செய்வதற்கு முன்வர வேண்டும். சுயாதீனமான தகுதிகள் மற்றும் நியாயம் என்பனவற்றின் அடிப்படையில் ரி.என்.ஏ வேண்டுகோள் அல்லது கோரிக்கை விடுக்கும் சிவிலியன் ஆளுனரின் தேவை பற்றிய விடயத்தை மத்திய அரசாங்கம் தீவிரமாக கவனத்தில் கொள்ளவேண்டும். அரசாங்கம் அடிக்கடி சர்வதேச அழுத்தங்களின் பிடியில் அகப்படுவதை கவனத்தில் கொள்ளும்போது, அந்தக் கோரிக்கை வேறொரு இடத்தில் இருந்து வருவதற்கு முன், அரசாங்கம் ரி.என்.ஏ சொல்வதை ஏற்றுக் கொண்டு செயலாக்குவதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை.

மத்தியில் ஆட்சியை பிடிக்கும் அரசாங்கங்கள் யாவும் அந்த நேரத்தில் உள்ள தமிழ் தலைமைகளைக் (மிதவாத, தீவிரவாத அல்லது போராளிகளுடன்) கையாளும்போது அவர்கள் குழந்தை அதை அவர்களே பார்த்துக் கொள்ளட்டும் என்ற ரீதியில் விடயங்களை விட்டுவிட்டன. அவர்களின் முன்னோடிகளைப் போலவே ஜனாதிபதி ராஜபக்ஸ அரசாங்கமும் ரி.என்.ஏ யினை பீதியடைய வைக்கும் அதே நேரம் மற்றவர்கள் பொறுமையோ அவகாசமோ பெறுவதற்கு முன் அவசரப்பட்டு பொருத்தமற்ற முடிவை எடுக்கும்படி செய்துவிடுகிறது.

அரசாங்கம் மற்றும் ரி.என்.ஏ ஆகிய இரண்டும் வேதனையான இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பது பற்றி பேசும் நடவடிக்கையின்போது - தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் பொறுப்புக்கூறல் பிரச்சினையை கிளப்பி அதன்மீது புழுதி வாரி வீசுகிறார்கள். இந்த புலம் பெயர்ந்தவர்கள் அந்த நேரத்தில் உள்ள அரசியல் தலைமை-மீது தாக்குதல் அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதை நிறுத்துவதில்லை. அது நாட்டில் பெரும்பான்மை இனமாக உள்ள ஒவ்வொரு சிங்களவரையும் பாதிக்கிறது. கொழும்பிலுள்ள எந்த ஒரு அரசாங்கத்தாலும் அவர்களின் உணர்ச்சிகள், உணர்வுகள், கவலை மற்றும் பயத்தினை அலட்சியப்படுத்த முடியாது.

அரசாங்கம் ரி.என்.ஏ யின் தூதுக்குழுக்களுடன் மூன்று நாட்கள் இருந்து பேச்சு வார்த்தைகள் நடத்தியும் விடயத்தில் எந்த திருப்பமும் இல்லாமல் ஜனவரி 2012 ல் பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தன. அரசாங்கம் சில ஒதுக்கீடுகளை மேற்கொண்டிருக்க முடியும், ஆனால் அவைகளை அந்த பேச்சு வார்த்தை மேசையில் விளக்கிவிட்டு வெளியேறியிருக்க வேண்டும். அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இருந்து வெளிநடப்பு செய்வதைப்போல காண்பிக்க விரும்பவில்லை. அது விடயங்கள் தடை படுவதையே விரும்பியுள்ளது.


ரி.என்.ஏ அதைத் தொடர்ந்து வெளியிட்ட அறிக்கைகளிலிருந்து வெளிவருவது, அரசாங்கம் ஒரு போதும் தனது சொந்த திட்டங்கள் எதனையும் வைத்துக்கொண்டு பேச்சு வார்த்தைகளுக்கு வருவதேயில்லை. ஆரம்ப அறிகுறிகள் அவர்கள் ஒரு பட்டியலிட்ட குறிப்புகளை பற்றிப் பேசுவது போல இருந்தது, ஆனால் எந்தப் பக்கத்திலிருந்தும் நிலையான ஒரு நோக்கம் அல்லது கோரிக்கை இருக்கவில்லை, அரசாங்கம் விரைவிலேயே ரி.என்.ஏ யினை எழுத்து மூலமான ஒரு சமர்ப்பிப்பை தரும்படி கட்டாயப் படுத்தியது. அப்போது கசிந்த செய்தி அறிக்கைகளின்படி ரி.என்.ஏ யின் கோரிக்கைகளில் அவர்களின் நிலையான மற்றும் தரப்படுத்தப்பட்ட அம்சங்களான சமஷ்டி மற்றும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு போன்றவை அதில் இடம்பெறவில்லையாம்.

ரி.என்.ஏ.யின் கோரிக்கைகள் க்ட்சி உருவாக்கிய குறிப்பிட்ட பரிந்துரைகள் மற்றும் திட்டங்களை குறிப்பிடுபவையாகவே இருந்தனவாம், அவை நடைமுறைக்கு ஏற்றவையாகவும் பெரும்பகுதி சிங்களவர்களின் உணர்வான ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி என்பனவற்றை அவர்களின் கருத்துக்கு இணங்கும் வகையில் கணக்கிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டவையாகவும் தோன்றுகிறது.

நியாயப் படுத்துவதற்கு அப்பால், ரி.என்.ஏ. யுடன் ஒரு உண்மையான பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னால் ஒரு அரசியல் தீர்வை மேற்கொள்வதற்காக அரசாங்கம் எதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் வழியை தன்னிச்சையாக நாடியது என்பது அனைவரினதும் ஊகத்துக் குரிய கேள்வியாக உள்ளது. அது தோல்வியில் முடிவதாக இருந்தாலும்கூட, அதில் பங் கெடுத்த இரு தரப்பினரும் தீர்ப்பதற்கு முயற்சித்த பரஸ்பர பிரச்சினைகள் மற்றும் கவலைகள் பற்றிய சில தெளிவுகளை வரைவு செய்திருக்க வேண்டும் - அது வெற்றிகரமாக நடந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்கூட. அந்த வழியில்தான் உலகெங்கிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. பந்து இப்போது அரசாங்கத்தின் பக்கமே உள்ளது. யுத்தத்துக்கு பின்னான, தேர்தலுக்கு பின்னான சமிக்ஞைகளை அது செய்திருப்பதிலிருந்து, மறு பக்கத்திலிருந்து தங்கள் குறைகள் ஈடு செய்யப்படும் என எதிர்பார்ப்பது ரி.என்.ஏ.யின் முறையாக உள்ளது. இனப் பிரச்சினைக்கான ஒரு அரசியல் தீர்வை மேற்கொள்வதற்காக இரு தரப்பினரும் ஒரே தேசம், ஒரே மக்கள் என்று வெற்றி பெற வேண்டுமாயின் தற்போதுள்ள அரசாங்கம் பெரும் பான்மை சிங்கள மக்களின் தேவைகளை ஏற்றுக்கொள்வதைப் போல, ரி.என்.ஏ யும் அவ்வாறு செய்ய வேண்டும். கரகோஷம் எழுப்ப இரண்டு கரங்கள் வேண்டும். கொலை செய்ய அல்லது முடமாக்க ஒன்று மட்டும் போதும்.

அரசாங்கம் மற்றும் ரி.என்.ஏ ஆகிய இரு தரப்பும் ஒருங்கிணைந்து வேற்றுமைகள் மற்றும் செயல்முறைகள் போன்றவற்றை சரி செய்ய முயலவேண்டும். ரி.என்.ஏ. கூட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தினூடாக நிறைவேற்றிக் கொள்ளவேண்டியது முற்றிலும் அரசாங்கத்தின் கடமை என்று கூறி, இந்த நடவடிக்கையில் ஒரு வெளியாள் போல விலகி நிற்க முடியாது. ஜே.ஆர் ஜெயவர்தனாவின் காலத்திலும் அதற்குப் பிறகும் இப்படியான ஒப்பந்தங்களின் தலைவிதி எப்படியிருந்தது, மற்றும் பாரிய சட்டபூர்வ அங்கீகாரம் மற்றும் நிரந்தரத் தன்மை என்பனவற்றை கொண்ட ஒரு உள்நாட்டில் உருவாகும் தீர்வினை எந்தப் பக்கத்திலிருந்து தோன்றும் உள் உடைவினால் எப்படி நிறுத்துவதற்கு முடிந்தது என்பதையும் தமிழ் மக்கள் நினைவு படுத்திப் பார்க்க வேண்டியதும் அவசியம்.

# உகண்டா பாதுகாப்பு அமைச்சர் பாதுகாப்புச் செயலருடன் சந்திப்பு



(கொழும்பு)

ஐந்துநாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள உகண்டா பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஒடொன்கோ ஜேஜே பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம் பெற்ற இச்சந்திப்பின் போது உகண்டாவின் பிரதிப் பாதுகாப்பு உயரதிகாரிகளான லெப்டினன்ட் ஜெனரல் சார்ள்ஸ் அங்கினா- பிரிகேடியர் ஜேம்ஸ் முகிரா- பிரிகேடியர் ஜே.டப்ளியூ. யருகாபா- பிரிகேடியர் இராமதன் யமுலேஷிரே- மேஜர் சார்ள்ங் அரெமு-லெப்டினன்ட் ஜோசப் கமென்கா மற்றும் உகண்டாவுக்கான இலங்கைத் தூதர் வி.கணனநாதன் ஆகியோரும் உடனிருந்தனர்.

# புலிகளும் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டமைக்கு ஆதாரங்கள் உண்டு

## என்கிறார் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய நிறைவேற்றுப் பணிப்பாளர்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது புலிகளும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் காணப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆனந்த பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சுயாதீன விசாரணைகளை நடாத்த அனுமதிக்குமாறு இலங்கையை இந்திய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட வட மாகாணசபையில் சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டுமென கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வட மாகாணசபையில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் உள்ளக விசாரணைகளின் மீது மக்களினால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாணசபை கொண்டுள்ள நம்பிக்கை அம்பலமாகியுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகளை நடாத்த இந்தியா முழு அளவில் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

2009ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது படையினரும் புலிகளும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

சர்வதேச விசாரணைகளை நடத்தி பாதிக்கப்பட்டவர் களுக்கு நியாயம் வழங்க இந்தியா முழு அளவில் அழுத்தம் கொடுக்க வேண்டியது அவசியமானது என்றார்.


# எரிபொருள் அகழ்வு குறித்து இலங்கை அரசுடன் பேச்சு

## கெய்ன் இந்திய நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

கெய்ன் இந்திய நிறுவனம் இலங்கை அரசாங்கத்துடன் எரிபொருள் அகழ்வு மற்றும் வர்த்தக மதிப்பீடுகள் குறித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாகவும் இலங்கையின் மன்னார் கடறபடுகையின் எரிபொருள் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வரும் கெய்ன் லங்காவின் தாய் நிறுவனமான கெய்ன் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



2013ஆம் ஆண்டுக்கான மூன்றாவது காலாண்டின் வருமானமாக 806 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிறுவனம் ஈட்டியுள்ளது.

இதன் மூலம் இந்திய திறைசேரிக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பங்களிப்பை வழங்க முடிந்தது. இந்தக் காலாண்டில் சிறப்பான முறையில் அகழ்வு பணிகளை மேற்கொண்டிருந்ததுடன் நாளாந்தம் 224,493 பீப்பாய் எரிபொருள் உற்பத்திகளை மேற்கொண்டு வந்தது.

கடந்த காலாண்டுடன் ஒப்பிடுகையில் இந்தக் காலாண்டில் எரிபொருள் உற்பத்தி 5 வீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலுக்குள் நகர நிர்மாணம் 25 வருடத்திற்கு வரிவிலக்கு

(கொழும்பு

கடற் பகுதியில் ஊடறுத்து நிறுவப்படவுள்ள புதிய நகர நிர்மாணப் பணிகளுக்கு 25 வருட வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

1.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் கடற் பகுதியில் ஊடறுத்து நிறுவப்படவுள்ள புதிய நகரத்துக்கான நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக சீனாவின் நிறுவனமொன்றுக்கு இலங்கை அரசாங்கத்தின் மூலம் வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக பகுதியை அண்மித்துக் காணப்ப[illegible] கடற் பரப்பில் 233 ஹெக்[illegible] பகுதி இவ்வாறு நகர நிர்மா[illegible] பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் நகரொன்றை நிர்மாணித்து, அந்தப் பகுதியின் ஒரு பகுதியை இலங்கை துறைமுக முகவர் நிறுவனத்துக்கு சீனா வழங்கவுள்ளது.

இந்த நிர்மாணப் பணிகள் எட்டு வருடங்களுக்குள் இடம் பெறவுள்ளதுடன், 25 வருட காலப்பகுதிக்கான வரிவிலக்கை பெற்றுக் கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரண தண்டனை கைதிகள் குறித்து மிகக் கவனமாக ஆராயப் பணிப்பு

(கொழும்பு)

கொலைக் குற்றவாளிகளாக மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வருபவர்கள் ஒவ்வொருவரினதும் வயது மனநிலை மற்றும் அவர்கள் புரிந்த குற்றச் செயலின் பாரதூரத்தன்மை என்பவற்றின் மீது கூடுதல் கவனம் செலுத்தி அவர்கள் பற்றிய ஆலோசனையை வழங்குமாறு நீதியமைச்சர் ரவூப் ஹக்கிம் தெரிவித்துள்ளார்.

மரணதண்டனை கைதிகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவினரின் அமர்வு நீதியமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பொழுது அவர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 424 சிறைக் கைதிகள் உள்ளனர். அரசியலமைப்பின் 34(1) உறுப்புரைக்கு அமைவாக மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சிபாரிசு செய்வதற்கு சம்பந்தப்பட்ட கைதிகள் ஒவ்வொருவரினதும் விடயங்களை தனித்தனியாக அலசி ஆராய்ந்து ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கையர் உட்பட 2000 பேர் சவுதியிலிருந்து நாடு கடத்தல்

(கொழும்பு)

கடந்த வார இறுதியில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சட்டவிரோத பணியாளர்களை அவர்களது சொந்த நாடுகளுக்கு திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சவுதி அரேபிய உள்துறை. அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை, யேமன், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், சூடான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.வேலை அனுமதிப்பத்திரம் இல்லாத மற்றும் வேலை அனுமதிப்பத்திரம் காலாவதியான இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

நாட்டின் பாரிய வர்த்தக மற்றும் வியாபார நிறுவனங்கள் அந்நாட்டின் உள்துறை அமைச்சினதும் தொழில் அமைச்சினதும் அதிகாரிகளினால் முற்றுகையிடப்பட்டு சோதனையிடப்பட்ட போது இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்

உரிய அனுமதிப்பத்திரம் இன்றி தங்கியிருக்கும் வெளிநாட்டு பணியாளர்களை திருப்பியனுப்பும் நடைமுறையை கடந்த வருடம் மார்ச் மாதம் சவுதி அரேபிய அரசாங்கம் அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து [illegible] வரை ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களது சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

சவுதி அரேபியாவின் மொத்த தொழில்படையில் 55 வீதமானவர்கள் வெளிநாட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரங்களுக்கு அமைய 20 மில்லியன் சனத்தொகையை கொண்ட சவுதி அரேபியாவில் 9.1 மில்லியன் வெளிநாட்டு தொழிலாளர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது

# நுரைச்சோலை அனல்மின்நிலையம் திருத்தத்திற்கு சீனா ஒத்துழைப்பு

(கொழும்பு)

தமது அரசாங்கத்தின் கடன் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுவரும் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் தற்போதைய நிலைமை குறித்து சீனா கவனம் செலுத்தியுள்ளது.

இது குறித்து இலங்கையில் உள்ள சீன தூதரகத்தின் பிரதிநிதிகள் சிலருக்கும், அமைச்சர் பவித்ராவன்னியாராச்சி உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன. அரசாங்கத்தின் ஆலோசனைக்கு அமைய இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் தற்போதைய நிலைமை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

சீன அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்களுக்கு அமைய நுரைச்சோலை அனல்மின் செயற்திறன்மிக்க ஒன்றாக செல்வதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கு இந்த சந்திப்பில் இணக்கம் கணப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மின்உற்பத்தி நிலையத்தின் பிரதான இயந்திரங்கள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களை தயாரித்த நிறுவனங்களின் நிபுணர்களை நாட்டுக்கு வரவழைத்து சோதனையிடுவதற்கும் தொழில்நுட்ப கோளாறுகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இளைஞர் விவகார அமைச்சின் கீழ் அமைக்கப்பட்ட தேசிய முகாமைத்துவ விஞ்ஞானக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்புவிழா நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்

# கல்விவலய ஆசிரிய ஆலோசகர்களை புதிய சேவைக்குள் இணைக்க நடவடிக்கை

(வலிகாமம்)

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கம் கொழும்பு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் மிகவிரைவில் இலங்கையின் கல்வி வலயங்களில் சேவையாற்றிவரும் ஆசிரிய ஆலோசகர்கள் "ஆசிரிய ஆலோசகர் சேவைக்குள்" உள்வாங்கப்படவுள்ளதாக, வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கப் பொதுச் செயலாளர் என்.பி. ஸ்ரீந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் வெளிவந்துள்ள நீதிமன்றத்தீர்ப்பின் பிரகாரம் இலங்கை முழுவதுமுள்ள ஆசிரிய ஆலோசகர் இந்தப் புதிய சேவைக்குள் உள்வாங்கப்படவுள்ளனர். அதற்கான ஆரம்பப்பணிகளை கல்வியமைச்சு மேற்கொண்டு வருவதாகவும் இதற்கான அனுமதியினை அமைச்சரவையிடம், கல்வியமைச்சுக் கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தச்சேவை உள்வாங்கலை 2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துமாறும், நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சேவை உள்வாங்கல் மூலம் ஆசிரிய ஆலோசகர்கள் குறிப்பிடப்படவுள்ள சம்பள உயர்ச்சியினையும் நிரந்தர சேவையினையும், தொழிற் கௌரவத்தினையும் பெறவுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்துள்ளார். (06)

# அகற்றப்பட்டது படைமுகாம்கள் அநாதரவான நிலையில் நாய்கள்

(குருநகர்)

யாழ்.நகரப் பகுதி மற்றும் புறநகர்ப் பகுதிகளில் படையினரால் வளர்க்கப்பட்ட நூற்றுக்கணக்கான நாய்கள் அநாதரவாக விடப்பட்டுள்ளன.

நாய்களைக் கொல்லக் கூடாதென்னும் மகிந்த சிந்தனைக்கும், தமது பாதுகாப்புக்குமாக வட பகுதியில் படையினரால் நிறுவப்பட்ட மினி முகாம்கள் மற்றும் காவலரண்கள் ஒவ்வொன்றிலும் ஐந்துக்கும் குறையாத நாய்கள் வளர்க்கப்பட்டிருந்தன.

கடந்த 15 வருடங்களுக்கும் மேற்பட்ட வருடங்கள் நேரம் தவறாத உண்டிகளைப் பெற்று வந்த மேற்படி நூற்றுக்கும் அதிகமான நாய்கள் படையினரால் திடீரெனக் கைவிடப்பட்டதும் உணவிற்காக அலைகின்றன.

எந்த வகையிலோ வயித்துப்பாட்டை நிரப்பி முகாம்கள், காவலரண்கள் அமைந்திருந்த பகுதிகளில் ஒன்று சேரப்படுத்து உறங்குவதையும் பரவலாகக் காணக்கூடியதாகவுள்ளது. (68)

# பாதுகாப்புக்கோரி வழக்குத்தாக்கல்

(முல்லைத்தீவு)

அனிஞ்சயன்குளம் மல்லாவியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாய் முல்லைத்தீவு நீதிமன்றில் சரணடைந்து தனது கணவரிடமிருந்து வீட்டு வன்முறைச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கோரியுள்ளார். சட்ட உதவி ஆணைக்குழு மூலமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கணவனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதுடன் கணவனை மனைவி, குழந்தைகள் உள்ள வீட்டிற்கு செல்லக்கூடாதெனவும், துன்புறுத்தக்கூடாது எனவும், மீறின் விளக்கமறியலில் வைக்கப்படுவார் எனவும் கட்டளை ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா பிறப்பித்துள்ளார்.

கணவன் கஞ்சா குடிபோதைக்கு அடிமையானவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (170)

# அறநெறிப்பாடசாலைகளின் விபரங்கள் கோரல்

(வலிகாமம்)

கொழும்பிலுள்ள இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரினால் இலங்கையிலுள்ள இந்து அறநெறிப் பாடசாலைகளின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

2014ஆம் ஆண்டு அறநெறிப்பாடசாலைகளில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களின் விபரங்கள், மாணவர்களின் வகுப்புரீதியான எண்ணிக்கை, அவர்களிற்குத் தேவையான பாடநூல்கள், சீருடைத் துணிகள், இசைக்கருவிகள், தளபாடத்திற்குத் தேவையான நிதியுதவிகள் போன்ற விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி விபரங்களைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள படிவங்களில் பூர்த்தி செய்து, எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248 $^{1}/_{1}$, காலி வீதி, கொழும்பு 4 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (06)

# எழுதுமட்டுவாள் மருதங்குளம் வீதியை புனரமைக்க கோரிக்கை

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட எழுதுமட்டுவாள் படித்த மகளிர் திட்டம் மருதங்குளம் வீதியினை புனரமைப்புச் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 2 கிலோ மீற்றர் நீளமான இவ்வீதியானது பல வருடங்களாக திருத் தப்படாமல் உள்ளது. இந்த வீதியினை 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றன. இந்தப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களை கொடிகாமம் சந்தைக்கு கொண்டு செல்ல இவ்வீதியே பயன்படுகின்றது.

எனவே சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட எழுதுமட்டுவாள் வடக்கு படித்த மகளிர் திட்ட வீதியினை திருத்தி அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# அபராதம் விதிப்பு

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடிப் பகுதியில் வீட்டில் கடல் ஆமை இறைச்சி சமைத்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் கஜநிதிபாலன், குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு எதிராக 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் 15 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் செல்ல உத்தரவிட்டார். (116)

# காந்தியடிகளின் சிரார்த்ததினம்

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியடிகளின் 66ஆவது சிரார்த்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர் நேற்று மு.ப. 10.30 மணியளவில் யாழ்.வைத்தியசாலை வீதிச்சந்தியில் அமைந்துள்ள காந்தியடிகளின் சிலைக்கருகில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் நினைவுரைகளும் மகாத்மாகீதங்களும் இசைத்ததுடன் சங்க உறுப்பினர்கள் மகாத்மாவின் சிலைக்கு மலர்மாலை அணிவித்ததுடன் மலரஞ்சலியும் நிகழ்த்தினர்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் இம்மலரஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (இ)



# டெங்கு பரவலை தடுக்கும் செயற்பாடு



(முழங்காவில்)

பூநகரிப் பகுதியில் உள்ள குளத்தில் குளக்கட்டு பணிகளுக்காக பனை வடலிகளிலிருந்த ஓலைகள் பிடுங்கப்பட்டு அக்குளத்தில் போடப்பட்ட நிலையில் அவற்றில் டெங்குபரவும் அபாயத்தை கருத்தில் கொண்டு அண்மையில் அரச சார்பான நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் அக்குளத்தில் ஆய்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குளத்தில் போடப்பட்டுள்ள ஓலைகளால் டெங்கு மலேரியா போன்ற நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் இதனால் அப்பகுதி மக்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாக நேரிடும். வாய்ப்பு உள்ளதாக முன்னர் தினமுரசு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (112)

# முரசின் இன்றைய பலன்




(31.01.2014 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 18 ஆம் திகதி.
பிரதமை / சித்தம். திருவோண நட்சத்திரம் பி.ப.3.12 வரை.
பின் அவிட்டம்.
இராகு காலம் 11.06 - 12.36 வரை. சுபநேரம் 06.36 - 08.06 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பாரபட்சம் காட்டுவதால் குழப்ப நிலை ஏற்படல், சட்டவிரோத விதிமுறையை மீறியதால் எச்சரிக்கை. |
| ரிஷபம் | இலவசமாக கிடைத்த பொருளினால் நன்மையடைதல், திருமணப் பேச்சுவார்த்திதை நன்மையில் முடியும். |
| மிதுனம் | சிரமதானப்பணி மூலம் சுற்றாடல் சுத்தத்தை மேற்கொள்ளல், சக ஊழியர்களிடம் பாகுபாடு காட்டல். |
| கடகம் | திருமண வேலைகளால் அலைச்சல், எதிர்பாராத விதமாக பயணம் தடைப்படல். |
| சிம்மம் | முயற்சியால் வெளியூர் பயணம் வெற்றியைக் கொண்டுவரல், பிள்ளையின் உடல்நலக்குறைவால் குடும்பத்தில் சோகம். |
| கன்னி | வாகனம் திருட்டுப்போகும் வாய்ப்பு ஏற்படல், விளையாட்டு விபரீதமாதல். |
| துலாம் | கோபத்தை அடக்கியதால் முரண்பாடு விலகுதல், எதிர்பார்த்த காரியம் இழுபட்டுச் செல்லல். |
| விருச்சிகம் | பணம் உதவியை கைவிடும் எண்ணம், செய்நன்றி மறவாது உதவி செய்ய நினைத்தல். |
| தனுசு | சட்டச்சிக்கலை தவிர்க்க முறையாக செயற்படல், திருமண விடயத்தில் எதிர்பாராத சிக்கல் தோன்றும். |
| மகரம் | நண்பருக்கு செய்த உதவியால் கலவரம், மன நிம்மதிக்காக சுற்றுலா செல்லும் எண்ணம். |
| கும்பம் | வேலை செய்யவதற்கு ஆர்வம் கொள்ளல், தவறான செயற்பாட்டால் சட்டத்திற்குள் அகப்படல். |
| மீனம் | செயற்பாட்டால் பாராட்டு, பிறரின் நடவழக்கை குறித்து அவதானமாக செயற்படல். |

# இலங்கை பெரு வெற்றி



(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இனிங்ஸ் மற்றும் 248 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று டாக்காவில் நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக பங்களாதேஷ் அணி 232 ஓட்டங்களையும் இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 730 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

இந்நிலையில் 498 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி ரங்கன ஹேரத், லக்மல் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. மொனிமுல் ஹக் நடுவரிசையில் களமிறங்கி இலங்கை பந்து வீச்சாளர்களை சமாளித்து ஓட்டங்களைக் குவித்து வந்தார். அரைச்சதம் கடந்த நிலையில் மொனிமுல் ஹக்கும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து களமிறங்கிய வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டனர். இறுதியில் பங்களாதேஷ் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழ்ந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொனிமுல் ஹக் 50, ஷகிப் அல் ஹசன் 25, நசீர் உசைன் 29, ஹஜி 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லக்மல் மூன்று, ரங்கன ஹேரத் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இலங்கை அணி இனிங்ஸ் மற்றும் 248 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக மஹேல ஜெயவர்த்தன தெரிவானார். இதேவேளை இப்போட்டி நான்கு நாட்களில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும், இறுதியுமான ஆட்டம் எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ளது.

## இல்ல மெய்வல்லுநர்

வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ் வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் மா. நடராஜசுந்தரம், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி வே. கமலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ். பேரின்பநாதன் தலைமையில்நடைபெறவுள் இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட முதன்மை ஆசிரியர் விஜயதாஸன், சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ரி. சுதாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (11)

## அவுஸ்ரேலியாவுடன் மோதவுள்ள தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

(ஜோகனஸ்பேர்க்)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் போட்டியில் விளையாட மெக்லாரன், பார்னல் தேர்வு செய்யப்பட்டனர்.

அடுத்த மாதம் தென்னாபிரிக்கா செல்லவுள்ள அவுஸ்ரேலிய அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் வரும் பெப்ரவரி, 12ஆம் திகதி செஞ்சுரியனில் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த இரண்டு போட்டிகள் போர்ட் எலிசபெத் (பெப். 20-24), கேப்டவுன் (மார்ச் 1-5) நகரில் நடைபெறவுள்ளன.

டெஸ்ட் தொடருக்கான 15 பேர் கொண்ட வீரர்களை, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது. வேகப்பந்துவீச்சாளர்களான மெக்லாரன், பார்னல், நான்கு ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் அணியில் இடம் பிடித்துள்ளனர். இவர்கள் இருவரும் 2010இல் இங்கிலாந்துக்கு எதிராக ஜோகனஸ்பேர்க் நகரில் நடந்த டெஸ்டில் அறிமுகமானார்கள். மெக்லாரன், ஒரே ஒரு டெஸ்டில் மட்டும் விளையாடினார். பார்னல், மூன்று டெஸ்டில் பங்கேற்றுள்ளார். அதன்பின் ஒருநாள் போட்டிக்கான அணியில் தங்களது இடத்தை தக்கவைத்துக் கொண்ட இவர்களால், டெஸ்ட் அணிக்கு திரும்ப முடியவில்லை.

அணி விபரம்: ஸ்மித் (கப்டன்), ஹசிம் அம்லா, டிவிலியர்ஸ், டுமினி, டுபிளிசர்ஸ், டீன் எல்கர், ரோரி கிளைன்வெல்ட், மெக்லாரன், மோர்கல், பார்னல், அல்விரோ பீற்றர்சன், ரொபின் பீற்றர்சன், பிலாண்டர், ஸ்ரெய்ன், தமி டிசோலிகிலி.

## வென்றது ஆஸி.



அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் ருவென்ரி-20 கிரிக்கெட் ஆட்டம் ஹோபர்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 213 ஓட்டகளைப் பெற்றது. இதில் கமரூன் வைட் 75, ஆரோன் பின்ஞ் 52 ஓட்டங்களைப் பெற்றனர்.

பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன் பது விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது. இதனால்அவுஸ்ரேலிய அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால், கடைசிக் கட்டத்தில் இங்கிலாந்தின் ரவி போபரா 27 பந்துகளில் 65 ஓட்டங்கள் (2 பவுண்டரி, 7 சிக்ஸர்) குவித்து அவுஸ்ரேலிய அணிக்கு கிலி ஏற்படுத்தினார்.

## ஆறுதல் வெற்றிபெறுமா இந்தியா

(வெலிங்டன்)

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி இன்று வெலிங்டனில் நடைபெறவுள்ளது. ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது. இந்நிலையில் ஐந்தாவது போட்டியில் இந்திய அணி ஆறுதல் வெற்றிக்காகப் போராடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆச்சரியமளிக்கும் இந்திய அணியின் தெரிவு

(வெலிங்டன்)

பந்து வீச்சில் சொதப்பும் அஸ்வின், ஜடேஜாவுக்குப் பதிலாக மிஸ்ராவை இந்திய அணி பயன்படுத்திக் கொள்ள முற்படாதது தனக்கு ஆச்சரியத்தை அளிப்பதாக என நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரர் சைமன் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் இந்திய சுழற்பந்து வீச்சாளர்களின் பலவீனங்களை குறிப்பாக நடுவரிசை ஓவர்களில் எப்படி ஆட வேண்டும் என்பதை கண்டறிந்து விட்டார்கள் என்பது முதல் இரு ஒருநாள் போட்டிக்குப் பின்னர் தெளிவாகத் தெரிந்தது. ஆனாலும் இந்திய அணி ரவீந்திர ஜடேஜா, அஸ்வினுக்கு தொடர்ந்து வாய்ப்பு வழங்கியது. அவர்கள் அற்புதமான வீரர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ராவுக்கு ஒரு முறை கூடவாய்ப்பு வழங்க முயற்சிக்காதது ஏன்? அவர் லெக் ஸ்பின்னர். இங்குள்ள பவுன்சர் ஆடுகளங்களை மற்றவர்களை விட அவர் நன்றாக பயன்படுத்தி இருக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி

2015ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய, நியூசிலாந்து நாடுகளில் இடம்பெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஸ்கொட்லாந்து, ஐக்கிய அரபு இராச்சிய அணிகள் தகுதிபெற்றுள்ளன. நியூஸிலாந்தில் இடம்பெற்றுவரும் தகுதிகாண் போட்டிகளில் ஐக்கிய அரபு இராச்சிய அணியும் ஸ்கொட்லாந்து அணி முதலிரு இடங்களைப் பெற்றுள்ள நிலையிலேயே அவ்வணிகள் உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றுள்ளன. இதற்கு முன்னர் ஸ்கொட்லாந்து அணி 1999ஆம் ஆண்டிலும் 2007ஆம் ஆண்டிலும் உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றியிருந்ததோடு, ஐக்கிய அரபு இராச்சிய அணி 1996ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தது.

## வீரர்களின் விலை நிர்ணயம்

INDIAN
PREMIER
LEAGUE
2014

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான ஏலத்துக்கு இந்திய வீரர்கள் சேவாக், யுவராஜ் சிங், யூசுப் பதான், அவுஸ்ரேலிய வீரர்கள் ஜோன்சன், பிரட் ஹடின், ஸ்டீவன் ஸ்மித் உள்ளிட்ட 31 பேருக்கு அடிப்படை விலையாக ரூ.2 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

50 இலட்சம், 1 கோடி, 1.5 கோடி, 2 கோடி என 4 பிரிவுகளில் அடிப்படை விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

7ஆவது ஐபிஎல் போட்டிக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 12ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ளது. இந்த ஏலத்துக்காக 10 நாடுகளைச் சேர்ந்த 233 வீரர்களின் பட்டியலை இறுதி செய்த ஐ.பி.எல். அமைப்பு, அது தொடர்பான விபரங்களை 7ஆவது ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் 8 அணிகளின் நிர்வாகத்திடமும் கொடுத்துள்ளது. இந்தப் பட்டியலில் 46 இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய வீரர்கள் தினேஷ் கார்த்திக், பிரவீண் குமார், அமித் மிஸ்ரா, ஆசிஷ் நெஹ்ரா, பிரக்யான் ஓஜா, யூசுப் பதான், வீரேந்திர சேவாக், யுவராஜ் சிங், மனோஜ் திவாரி, ரொபின் உத்தப்பா, முரளி விஜய், அவுஸ்ரேலியாவின் ஜோர்ஜ் பெய்லி, பிரட் ஹடின், பிரட் ஹொட்ஜ், மைக்கல் ஹசி, மிட்செல் ஜோன்சன், பிரெட் லீ, ஷோன் மார்ஷ், ஜேம்ஸ் பட்டின்சன், ஸ்டீவன் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், இங்கிலாந்தின் அலெக்ஸ் ஹேல்ஸ், சமித் பட்டேல், கெவின் பீற்றர்சன், நியூசிலாந்தின் பிரெண்டன் மக்கலம், ரெய்லர், தென்னாபிரிக்காவின் கலிஸ், இலங்கையின் டில்சான், மஹேல ஜெயவர்த்தன, மத்தியூஸ், மேற்கிந்தியத் தீவுகளின் மார்லான் சாமுவேல்ஸ் ஆகிய 31 பேரின் அடிப்படை விலையாக 2 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி இந்த ஆண்டு அயர்லாந்து மற்றும் இங்கிலாந்துக்கு சென்று விளையாடவிருப்பதால் அதற்கு தயாராவதற்காக சங்கக்காரா போன்ற வீரர்கள் ஐ.பி.எல். போட்டியில் இருந்து விலகியுள்ளதாகத் தெரிகிறது. சங்கக்காரா, கடந்த ஐ.பி.எல். போட்டியில் சன்ரைஸர்ஸ் அணிக்கு கப்டனாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த முறையும் பாகிஸ்தான் வீரர்கள் இடம்பெறாதபோதிலும் பாகிஸ்தானில் பிறந்து வெளிநாட்டில் குடியேறியவர்களான அசார் மெஹ்மூட் (இங்கிலாந்து) பவாட் அஹமது (அவுஸ்ரேலியா) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் அசார் மெஹ்மூட் கடந்த ஐபிஎல் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடினார்.

40 வயதுக்கு மேற்பட்ட வீரர் முத்தையா முரளிதரனின் அடிப்படை விலை 1 கோடியாகும். இவர் கடந்த சீசனில் பெங்களூர் அணிக்காக விளையாடினார்.

## முதன் முறையாக

(டுபாய்)

தமது நடுவர் குழாமில் முதன் முறையாக பெண் நடுவர் ஒருவரை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) இணைத்துள்ளது.

கெத்தே க்ரொஸ் என்ற நியூசிலாந்தின் பெண் நடுவரே சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 2014ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் நடுவர் குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

கெத்தே குரொஸ் இதற்கு முன்னர் 2009 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பெண்கள் கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளின் நடுவர் குழாமிற்குள் இணைக்கப்பட்டிருந்தார்.

இதன்படி, 55 வயதான கெத்தே குரொஸ் இனி வரும் காலங்களில், பெண்கள் கிரிக்கெட் போட்டிகளில் மாத்திரம் இன்றி, சர்வதேச மூன்றாம் தர கிரிக்கெட் போட்டிகளிலும் நடுவராக கடமையாற்ற முடியும் என்று சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.



கைதடி நவீல்ட் பாடசாலையின் வீதியோட்டம் அண்மையில் நடைபெற்றது. ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டியில் ஏராளமான வீர,வீராங்கனைகள் பங்குகொண்டன. நவீல்ட் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வை யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகன் ஆரம்பித்து வைத்தார். இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை எஸ். நெசிந்தன், இரண்டாமிடத்தை எஸ். சர்வானந்தன், மூன்றாமிடத்தை அஜீத் அகமட், நான்காமிடத்தை எஸ். றஜிதரன், ஐந்தாமிடத்தை கே. சதீஸ்குமார், ஆறாமிடத்தை ஏ. பிரகாஸ் ஏழாமிடத்தை எல். விகிர்த்தன், எட்டாமிடத்தை ஏ. சுபாஸ்கரன், ஒன்பதாமிடத்தை எஸ். லுக்சன், பத்தாமிடத்தை ஈ. நிர்மலன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை எஸ். லக்சனா, இரண்டாமிடத்தை சந்தியா, மூன்றாமிடத்தை டி. ரஜனிசியா ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். இதேவேளை, இப்பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (51)

## சுதுமலை நாவலர் முன்னேற்றம்

(அளவெட்டி)

கும்பலை பாரதி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாவட்ட அணிகளுக்கிடையிலான தாச்சிப் போட்டியின் இரண்டாவது சுற்றுக்கு சுது-மலை நாவலர் அணி முன்னேறியுள்ளது. அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச் சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இணுவில் அண்ணா அணியும், சுதுமலை நாவலர் அணியும் மோதின. ஆரம்பத்தில் இரு அணிகளும் மாறி மாறி பழங்களைப் பெற்ற போதும் போட்டியின் பிற்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய சுதுமலை நாவலர் அணி 8:2 என்னும் பழங்கள் அடிப்படையில் வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள போட்டியில் தாவடி காளியம்பாள் அணியும், உடுவில் உதயசூரியன் அணியும் மோதவுள்ளன. (48)

## உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஆறு முதல் 11 வரையான வகுப்புக்களில் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான தரவட்டக் கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட சகல உடற்கல்வி பொறுப்பாசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் கேட்டுள்ளார்.

## இல்ல மெய்வல்லுநர்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் எம். கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளஇப் போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராகஇக்கல் லூரியின் பழைய மாணவர் எஸ். பாஸ்கரன் கலந்துகொள்ளவுள்ளார். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாக மூட்டுமாறு பாடசாலைச் சமூகத்தினர் கேட்டுள்ளனர்.

# சத்தியன் அதிரடிச் சதம்

## 229 ஓட்டங்களால் கொக்குவில் இந்து வெற்றி



(கொக்குவில்)

சத்தியனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 229 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளுக்கிடையிலானஆட்டம் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சத்தியனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி முதல்இனிங்ஸிற்காகசகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சத்தியன் 55, கபிலன் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாந் ஐந்து ஜனக்ஷன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனக்ஷன் 25, கதேஜன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாரதி நான்கு, பவி மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

23 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சத்தியனின் அதிரடிச் சதத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சத்தியன் 105, கிளின்ரன் 65 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜேதன் நான்கு, ஜெரோம், நிரோஜன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 285 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி பாரதி, பவி ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் சரத்குமார் 22 ஓட்டங்க்ளைப் பெற்றார். பந்து வீச்சில் பாரதி ஆறு, பவி நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 229 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (48)

## சென். சாள்ஸ் ம.வி. மெய்வல்லுநர் வீரமாமுனிவர் இல்லம் முதலிடம்





(யாழ்ப்பாணம்)

சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வீரமாமுனிவர் இல்லம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் வீர, வீராங்கனைகள் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

இதில் வீரமாமுனிவர் இல்லம் 534 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், ஞானப்பிரகாசர் இல்லம் 490 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், தனிநாயகம் இல்லம் 379 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

இதேவேளை, இப்போட்டியில் மூன்று பிரிவுகளில் வெற்றிபெற்று 15 பேர் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளனர். இதில் 11 வயதுப்பிரிவின் ஆண்கள் பிரிவில் எ. தனுஸ், பெண்கள் பிரிவில் சு. சாருஜா, 13 வயதுப் பிரிவின் ஆண்கள் பிரிவில் பி. சஞ்சய், பெண்கள் பிரிவில் அ. ஜீவசூரியா, 15 வயதுப் பிரிவின் ஆண்கள் பிரிவில் ரி. எஸ்றோன், பெண்கள் பிரிவில் நி. துஸ்யந்தி, இ. லவீனா, க. கம்சிகா, 17 வயதுப் பிரிவின் ஆண்கள் பிரவில் அ. லெனின் அலெக்ஸ், பெண்கள் பிரிவில் கி. பியூலா, ச. சானுஜா, 19 வயதுப் பிரிவின் ஆண்கள் பிரிவில் அ. மயூரன், கமில்ரன், பெண்கள் பிரிவில் தோ. பிரிந்தினி, 21 வயதுப் பிரிவின் ஆண்கள் பிரிவில் அ. அமலசீலன், பெண்கள் பிரிவில் ஜே. மரீனா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வித்தியாலய அதிபர் கே.பி. கிறிஸ்தோபிள் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. அருணகிரி நாதன், கௌரவவிருந்தினர்களாக அருட்தந்தை ஆர்.எச். சண்முக நாயகம், முன்னாள் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எவ். ரூபசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (எஸ்.பி.)

# தீர்வுக்கான இதுவரை கால முயற்சிகளை சீர்தூக்கிப்பார்க்க வேண்டிய தருணம்!

- சாலையூரான்

ஜெனீவா கூட்டத்தொடர் என்கிற விவகாரம் இப்போது இனப்பிரச்சினை விவகாரத்தில் முனைப்பு பெற்றிருக்கும் அரசையும் தமிழ் கூட்டமைப்பையும் பாடாய்ப்படுத்தும் ஒரு விவகாரமாக மாறியிருக்கிறது.

நல்லிணக்கம் பொறுப்புக் கூறல் என்கிற சர்ச்சையில் உண்மையாக இலங்கை அரசுக்கு ஏதாவது நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றதா என்பதற்கப்பால் இதனால் ஏதோ முழு நாட்டுக்கும் பிரச்சினை என்பதாக காட்டிக்கொள்ளும் போக்கொன்றும் இதில் முனைப்பு பெற்றிருக்கிறது.

இதன் மூலம் தென்னிலங்கை மக்களையும் அதன்வழி அங்குள்ள அரசின் பங்காளிக் கட்சிகளையும் ஒரு பரபரப்பான நிலையில் வைத்திருப்பதற்கான ஒரு வழிமூலமாக இந்த ஜெனீவா கூட்டத்தொடர் இப்போது ஆக்கப்பட்டிருக்கிறது

அவ்வாறே தமிழ் கூட்டமைப்பினரும் இந்த ஜெனீவா மாநாட்டை முன்னிறுத்தி இதன் மூலம்தான் தமிழ் மக்களின் முழுப்பிரச்சினைக்கும் தீர்வைக்காண வழிகள் திறந்திருப்பதாக கூறிக் கொண்டு தமது அரசியல் இருப்பை தக்கவைக்கும் முயற்சிகளும் இதில் இனங்காணப்பட்டிருக்கின்றன.

இதன்மூலம் தமிழ் சூழலை மட்டுமன்றி தென்னிலங்கை மக்களையும் பரபரப்பான ஒரு நிலையில் வைத்திருப்பதற்கு தம்மை அறியாமலே இரு தரப்பினரும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

பொருட்களின் விலையேற்றம் நாட்டின் அனைத்து தரப்பினரதும் நாளாந்த வாழ்வில் குறைந்த பட்சம் தமக்கான பிழைப்பூதியத்தை அடைந்துகொள்ளுவதையே பெரும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது.

இந்த நிலையில் நாட்டுக்கு வெளியே இருந்து இலங்கைக்கு ஏதோ நிகழ்ந்துவிடப்போவதாக ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் வெளிப்படுத்தும் தகவல்கள் இந்த மக்கள் தாம் உயிர் வாழ்வதற்காக நாளாந்தம் எதிர்கொள்ளும் தமது அவலங்களை அவர்களாகவே மறந்துவிட வேண்டும் என்ற நோக்கில் வெளியிடப்படுகின்றனவா என்றும் எண்ணத் தோன்றுகிறது.

போர்ச்சூழலில் இடம்பெற்ற உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் என்பது இலங்கை அரசின் தரப்பிலிருந்து இன்னும் சரியாக மேற்கொள்ளப்படவில்லை என்பதுதான் ஜெனீவா கூட்டத் தொடரை முன்நிறுத்தும் வெளிச்சக்திகளின் தாரக மந்திரமாக இருக்கிறது.

இன்று இந்த விவகாரத்தை கையிலெடுத்துக்கொண்டு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது மேலாதிக்க அரசியலை முன்னெடுக்க விரும்பும் இதே வெளிச்சக்திகள்தான் இறுதிப்போரை வழிநடத்தின என்பது உலகம் அறிந்த விடயம்.

எனில், இறுதிப்போரில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அனர்த்தங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு இந்தப்போரை வழிநடத்திய மேற்குலகின் சில வல்லரசுகளுக்கும் இருப்பது கூறாமலே விளங்கும்.

இலங்கை அரசை பொறுப்புக் கூறுமாறு இந்த நாடுகள் வற்புறுத்திக் கொண்டிருப்பதன் உள்ளடக்கம் என்ன என்பது இவ்விடத்தில் முக்கியமான கேள்வியாகும்.


இது ஒருபுறமிருக்க, இலங்கையில் இடம்பெற்ற உரிமை மீறல்களுக்கு வெளிச்சக்திகளின் வகிபங்கு என்ன என்பது தமிழ் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு புரியாத ஒரு விடயமல்ல.

அவ்வாறிருக்கையில், சர்வதேசத்தைக் கொண்டு இலங்கை அரசுக்கு பாடம் புகட்டப் போவதாக தமிழ் கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு கூறிக் கொண்டிருப்பதை எதன் அடிப்படையில் ஏற்றுக்கொள்வது என்பதை அவர்கள் தெளிவு படுத்த வேண்டும்.

சர்வதேசம் என்ற பதத்துக்குப் பின்னால் எந்தெந்த நாடுகளை அவர்கள் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்? குறித்த அந்த நாடுகள் ஒவ்வொன்றும் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் குறிப்பாக எத்தகைய நிலைப்பாடுகளை, அணுகு முறைகளை கொண்டிருக்கின்றன என்பதையும் தமிழ் கூட்டமைப்பினர்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

அவ்வாறே எந்தெந்த நாடுகளின் அரசியல் தலைமைகளுடன் தீர்வு நோக்கிய பேச்சுக்களுக்காக இதுவரை மேற்கொண்ட முன்னெடுப்புகள் எத்தகைய பலன்களை தந்திருக்கின்றன என்பதையும் அவர்கள் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத்தருவதாக கூறி தமிழ் கூட்டமைப்பினர் இதுவரை மேற்கொண்ட முயற்சிகளில் வெளியுலகத்தைக் கொண்டு இலங்கைக்கு கற்பித்த பாடங்கள் எத்தகைய முன்னேற்றங்களை தந்துள்ளன என்ன விளைவுகளை ஏற்படுத்தி இருக்கின்றன என்பதையெல்லாம் தமிழ் மக்கள் சீர்தூக்கிப்பார்க்க வேண்டிய தருணம் இது.




# சினிமா சினிமா

இயக்குநர் பாசிலின் மகனும் முன்னணி மலையாள நடிகருமான பஹத் பாசிலுடனான நஸ்ரியாவின் காதல், இரு வீட்டாரின் சம்மதத்துடன் திருமணச் செய்தி வரைக்கும் வந்திருக்கிறது. பஹத் பாசிலுடன் சமீபமாக காதலில் கிசுகிசுக்கப்பட்டு வந்தவர் ஆண்ட்ரியா. "அன்னயும் ரசூலும்" படத்தில் நடித்தபோது ஆண்ட்ரியாவுடன் காதல் வயப்பட்டேன் என தனது இணைய தளத்தில் செய்தி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார் பஹத். இதற்கு மறுப்பு தெரிவித்தார் ஆண்ட்ரியா. இந்நிலையில் பஹத் - நஸ்ரியா திருமணம் வரும் ஆகஸ்டில் நடக்கவுள்ளது.

கணிதமேதை ராமானுஜத்தின் கதை, "ராமானுஜன்" என்ற பெயரில் திரைவடிவம் பெறுகிறது. ஞான ராஜசேகரன் இப்படத்தை இயக்குகிறார். படத்தில் பிரபல தொழிலதிபர் நல்லி குப்புசாமியும் நடிக்கிறார். நோயுற்ற நிலையில் லண்டனில் இருந்து இந்தியா திரும்புகிற ராமானுஜரை சென்னையில் தனது இல்லத்தில் வைத்து ஆதரிக்கிற ஆதி நாராயணன் செட்டியார் என்கிற தொழிலதிபர் பாத்திரத்தில் அவர் நடிக்கிறார்.

லிங்குசாமியின் தயாரிப்பில் சீனு ராமசாமி இயக்கும் படம் "இடம் பொருள் ஏவல்". விஜய் சேதுபதி - விஷ்ணு நடிக்கின்றனர். முதன் முறையாக வைரமுத்து - யுவன்ஷங்கர்ராஜா கூட்டணியில் பாடல்கள்...

"அஞ்சான்" படத்துக்கான திரைக்கதையை மூன்று முறை மாற்றியுள்ளார் இயக்குநர் லிங்குசாமி. "ஆனந்தம் படத்தில் அப்பாஸ் நடித்த பாத்திரத்துக்கு முதலில் சூர்யாவைத்தான் தேர்வு செய்தேன். அதே போல் "சண்டக்கோழி" படமும் சூர்யாவை மனதில் வைத்தே உருவாக்கப்பட்டது. ஆனால் வாய்ப்புகள் தவறிப் போயின. "அஞ்சான்" சூர்யாவிடம் நான் சொன்ன 4ஆவது கதை. சமந்தா ஹீரோயின். படத்தில் பொலிவுட் நடிகர்கள் பலர் நடிக்கின்றனர். ஹீரோயிஸம் சார்ந்த கதை என்பதால் "அஞ்சான்" என பெயர் வைத்துள்ளேன் என்கிறார் லிங்குசாமி.

புதிய படம் ஒன்றுக்கு "கண்ணன் 1 காதலி 2" என்று பெயரிடப்பட்டுள்ளது. "ஹீரோ பைரவ் ஒரே நேரத்தில் ஹீரோயின்கள் பார்கவி, மோனிகாவை ஒருவருக்குத் தெரியாமல் இன்னொருவரை காதலிக்கிறார். இறுதியில் இருவரின் காதல் பிடியில் சிக்குகிறார். முடிவு என்ன என்பதைக் காமெடியாகச் சொல்லியிருக்கிறேன். சினிமா எடுப்பதை விட ஒரு படத்துக்கு விளம்பரம் செய்வதில்தான் வித்தியாசமான அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. அந்த வகையில் ரசிகர்களின் கவனத்தை இழுக்கவே இந்த தலைப்பு" என்கிறார் இயக்குநர் ஏ.கோபால்சாமி.













சாத்தான், பூதம் ஆகிய கற்பனைப் பாத்திரங்களின் சாகசங்கள் நிறைந்த படம் "13ஆம் பக்கம் பார்க்க". பழமை வாய்ந்த ஒரு புத்தகத்தின் 13ஆம் பக்கத்தில் சாத்தான் ஒளிந்திருக்கிறது. அந்த சாத்தான் வெளிவந்து செய்யும் அட்டகாசங்களே படம். புகழ் மணி எழுதி, இயக்கியுள்ளார். படப்பிடிப்பு முடிந்து கிராபிக்ஸ் காட்சிகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

தனுஷ், செல்வராகவன் ஆகியோரின் தந்தை கஸ்தூரிராஜா இயக்கும் 23ஆவது படமாக உருவாகிறது "காசு பணம் துட்டு". புதுமுகங்கள் நடிக்கிறார்கள். முக்கிய பாத்திரங்கள் ஏற்று பிரபு, ராதிகா நடிக்கின்றனர்.

பொலிவுட் நடிகை கத்ரினா கைப்பின் தாயார், சென்னையில் ஆண்டுகள் வசித்தவர் இப்போது மதுரையில் வசித்து வருகிறார்.

நமீதா தீவிர அரசியலில் குதிக்க, சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். அந்தவகையில், தான் ஜோடி சேர்ந்து நடித்த ஒரு நடிகரின் கட்சியில், தன்னை இணைத்துக் கொள்ள கேட்டார். ஆனால் நடிகரோ, "கவர்ச்சியை காட்டி ஓட்டு வாங்கும் நிலையில் நானில்லை..." என்று சொல்லி, மறுத்து விட்டாராம்.

மங்காத்தாவில் இருந்து, நெகடிவ் ரோல்களில் அஜீத் நடித்து வருவதையடுத்து, அப்பட நாயகியான த்ரிஷாவும், வில்லி வேடங்களில் நடிக்க விருப்பம் தெரிவித்து உள்ளார்.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் படத்தையடுத்து, விஜய் நடிக்கும் படத்தில், பிரியங்கா சோப்ரா அவருக்கு ஜோடியாகிறார். இவர்கள் ஏற்கனவே தமிழன் என்ற படத்தில், 10 ஆண்டுகளுக்கு முன்பே, "டூயட்" பாடியவர்கள்.

# பாம்பன் பாலத்துக்கு நூறு வயது!



கடலில் கப்பல்கள் செல்லும்போது திறந்து மூடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள ராமேசுவரம் அருகேயுள்ள பாம்பன் ரயில் பாலம் பெப்ரவரி 24 ஆம் திகதியுடன் நூறு ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்திய ரயில்வே நிர்வாகம் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட இருக்கிறது.

ராமேசுவரம் தீவு ஒரு காலத்தில் இந்தியாவுடன் இணைந்த நிலப்பரப்பாகவே இருந்து வந்தது.

கி.பி.1480 ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகப் பெரிய புயலால் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் கடல்நீர் உட்புகுந்ததால், ராமேசுவரம், பாம்பன் உள்ளிட்ட நிலப் பகுதிகள் தனித்தீவுகளாக மாறின.

ராமேசுவரம் திருத்தலத்தை தரிசிக்க வரும் யாத்ரீகர்கள் கடலைக் கடந்து செல்ல வசதியாக ராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் விஜயரகுநாத சேதுபதி மண்டபத்தையும், பாம்பனையும் இணைக்கும் வகையில் இலவசமாக படகுப் போக்குவரத்தை அப்போது தொடங்கியிருக்கிறார்.

ஆங்கிலேயர்கள் காலத்தில் கீழே கப்பலும், மேலே ரயிலும் செல்லும் வகையில் 1911 ஆம் ஆண்டு ரயில் பாலம் கட்டுவது என முடிவு செய்யப்பட்டு, ஜெர்மனியைச் சேர்ந்த ஸ்கெர்ஜர் எனும் பொறியாளரால் சுழலும் தூக்குப் பாலம் வடிவமைக்கப்பட்டு பணிகளும் தொடங்கின. 1913 ஆம் ஆண்டு பாலம் கட்டும் பணிகள் முடிந்து மண்டபத்தையும், ராமேசுவரம் தீவையும் இணைக்கும் இந்தப் பாலம் 6740 அடி தூரத்துக்கு கட்டப்பட்டது. மணற்கல்லுடன் கூடிய பவளப் பாறைகளின் மீது 40 அடி இடைவெளியில் 145 தூண்களுடன் (ஏறத்தாழ 2.கி.மீ) கட்டி முடிக்கப்பட்டது.

கப்பல்கள் செல்ல வழிவிடும் ஸ்கெர்ஜர் தூக்குப் பாலம் மட்டும் 214 அடி நீளத்தில் கப்பல்கள் செல்லும் போது திறந்து மூடும் வகையில் பாம்பன் ரயில் பாலத்தின் நடுவில் அமைந்துள்ளது. இத் தூக்குப் பாலம் கப்பல்கள் செல்லும்போது மட்டுமே திறந்து மூடும் வசதியுடையது. தூக்குப் பாலத்தில் அமைக்கப் பட்டிருக்கும் கிங்லிவர் எனப்படும் நெம்புகோலின் உதவியால் பாலத்தை மேலே தூக்கவும், இறக்கவும் முடியும். இதுவே இப் பாலத்தின் முக்கிய சிறப்புமாகும்.

பாம்பனிலிருந்து ராமேசுவரம் வழியாகத் தனுஷ்கோடிக்கு கடந்த 24.2.1914 ஆம் ஆண்டு ரயில் போக்குவரத்து தொடங்கியது. சென்னை, மதுரை போன்ற நகரங்களிலிருந்து தனுஷ்கோடிக்கு ரயில் விடப்பட்டது. இதன் மூலம் இலங்கை செல்லும் பயணிகள் இந்தோ-சிலோன் போட் மெயில் மூலம் தனுஷ்கோடி துறைமுகத்துக்கு வந்து கப்பல் மூலம் தலைமன்னார் சென்று அங்கிருந்து ரயில் மூலம் கொழும்புக்குச் சென்றனர்.

போக்குவரத்து வசதிகள் சரியாக இல்லாத காலத்திலேயே கடலில் கப்பல்கள் செல்லும்போது திறந்து மூடும் வகையில் வடிவமைக்கப்பட்ட இப்பாலம் வரும் 24.2.2014 ஆம் திகதி தனது நூறாவது வயதினை தொடுகிறது.

# எமது கடல் வளம் எமக்கு மட்டுமே
## அவற்றை எவருடனும் பங்கு போட முடியாது



- துறையூர் காசி கட்டுரையிலிருந்து.

இலங்கை இந்திய மீனவர் [illegible]ரினை தொடர்பாக அண்மையில் இலங்கை மற்றும் இந்திய மத்திய அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக இரு நாட்டு கடல் பாதுகாப்பு படையினாலும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பில் இணக்கம் காணப்பட்டு அதன்படியான விடுவிப்புகளும் பறிமுதல் செய்யப்பட்ட மீன்படி உபகரணங்கள் மீளளித்த நிகழ்வுகளும் நடந்தேறியதாக செய்திகள் வெளிவிக்கின்றன..

நீண்ட நெடிய இழுத்தடிப்பின் பின்னர் இரு நாட்டு மத்திய அமைச்சர்களுக்கிடையிலான குறித்த சந்திப்பின் விளைவாக மீனவர்கள் எல்லை தாண்டும் நடவடிக்கைகள் நிகழாது என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், சில தினங்கள் கூட கழிந்திராத நிலையில் இலங்கை கடற் பரப்புக்குள் நுழைந்த தமிழக மீனவர்கள் நெடுந்தீவுக் கடல் பகுதியில் காணப்படக்கூடிய கடல் வளங்களை வாரி. எடுத்துக் கொண்டிருந்த வேளை இலங்கை கடற்படையினரிடம் அகப்பட்டிருக்கின்றார்கள்.

இது தமிழக மீனவர்கள் எமது கடல் பிரதேசத்துக்குள் நுழைந்து எமக்கென உள்ள கடல் வளங்களை களவாடும் முயற்சியிலிருநது எக்காலத்திலும் பின்வாங்கமாட்டார்கள் என்ற தோற்றப்பாட்டினை பகிரங்கமாக காட்டிநிற்கிறது.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறி பிரவேசித்து இலங்கை மீனவர்களுக்கு உரித்தான கடல் வளங்களை எடுத்துச் செல்லும் தொந்தரவான செயற்பாட்டிற்கு இலங்கை அரசு தரப்போ அல்லது கடற்றொழிலாளர் தரப்போ ஒரு காலத்திலும் இணக்கமான சமிக்ஞை காட்டியதில்லை.. மத்திய அமைச்சர்கள் மட்டத்திலான சந்திப்பிலும் கடல் எல்லை தாண்டி மீன்பிடிப்பதை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. சமகால நிலைமை, சம்பந்தப்பட்ட இரு தரப்பு மீனவர்களும் சந்தித்துப் பேச வேண்டிய கட்டாயத்தினை வலியுறுத்தி நிற்கிறது. இலங்கை தமிழக மீனவர்களுக்கிடையிலான சந்திப்பு விரைவாக நடைபெறுவது அவசியம். அச் சந்திப்பில் எமது கடற்றொழிலாளர்கள் சார்பில் கலந்து கொள்ளக்கூடிய பிரதிநிகள் தமிழக தரப்பின் தந்திரோபாயங்களுக்குள் சிக்கிவிடாமல் இருப்பதுடன் எந்தக் காரணத்தின் நிமித்தமும் தமிழக மீனவர்களை எமது கடல் பிரதேசத்தினுள் அனுமதிப்பதில்லை என்ற அடிப்படை ஏற்பாட்டில் இருந்து நழுவாமல் இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அத்தகைய உறுதிப்பாட்டில் நிற்பதன் மூலம்தான் நமது நாட்டு கடல் வளத்தினை நமக்கென வைத்திருக்க முடியும்

நமது நாட்டு மக்களின் பொருளாதார சமூக வாழ்வில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்ற கடல் தொழில் துறை நாட்டின் தேசிய வருமானத்தில் 2 வீதத்தை தந்து கொண்டிருக்கக் கூடிய துறையாக இருந்து வருகின்றது. உடல்வளர்ச்சியில் பிரதான

தேவையான (Proteins) புறோட்டின்ஸ் மேற்டி கடல் உற்பத்தி பொருட்களில் இருந்தே அதிகமாக கிடைக்கின்றன.

இதை விட மீன்பிடி மற்றும் அது சார்ந்த தொழில் துறையில் முழுக்க முழுக்க சார்ந்திருக்கக்கூடிய 1397கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய 1,44,520 க்கும் அதிகமான தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்டதாக காணப்படுகின்றது..

இது விடயம் நமது நாட்டின் தேசிய பாதுகாப்புடனும் மறைமுக தொடர்பு கொண்டதாக இருக்கின்றது. எனவே வழவழப்பான விட்டுக் கொடுப்பு அல்லது புரிந்துணர்வு உடன்பாடு அல்லது பாரம்பரியத்தை தழுவிய ஏற்பாடுகள் போன்ற பிசு பிசுத்துப் போகும் தீர்மானங்களுக்கு அப்பால் எமது கடல் வளம் எமக்கு மட்டுமே அவற்றை எவருடனும் பங்கு போட அனுமதிப்பதில்லை என்ற அடிப்படையில் இருந்து விலகாத வகையில் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தை மேசையில் இலங்கைத் தரப்பின் நகர்வு இருக்க வேண்டும் என்ற எமது சமூக அக்கறையுடன் கூடிய ஆதங்கத்தினை மீண்டும் மீண்டும் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம்

இது விடயத்தில் அக்கறையுடன நேர் முகம் கொடுத்து நின்று கொண்டிருக்கும் சக்திகளுடன் தொழிலாளர்களுக்காகவும் நாட்டின் தேசிய நலனுக்காகவும் அக்கறையோடு சிந்திக்க வல்ல அனைத்து முற்போக்கு சக்திகளையும் கூடவே சமூக அக்கறையுள்ள ஊடகங்களையும் ஒருமித்து தமது கவனத்தையும் இது விடயத்தில் குவியச் செய்யுமாறு காலத்தின் அவசியம் வேண்டி நிற்கிறது

# உயிரின் விலை மலிவு!

நாம் குடிக்கும் குளிர்பானங்களில் உள்ள கெடுதிகள் பற்றி திரும்பத் திரும்ப செய்திகள் வெளியாகின்றன. ஏறக்குறைய உலகம் முழுவதிலும் விற்கப்படும், நம் நாட்டிலும் பிரபலமான அந்தக் குளிர்பானத்தில், ஒரு எலும்புத் துண்டைப் போட்டு, ஒரு வாரம் வைத்திருந்தால், எலும்புத் துண்டு முழுவதும் கரைந்து காணாமல் போகக் கூடும். அந்த அளவிற்கு அமிலத் தன்மை அதிகம். குளிர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அதில், "எதிலின் கிளைகோல்" என்ற இரசாயனப் பொருளைச் சேர்க்கின்றனர்.

நான்கு பாகை செல்சியஸ் வெப்பநிலையில் தண்ணீர் பனிக் கட்டியாகி விடும் என்பது அனைவருக்கும் தெரியும். தண்ணீரில் எதிலின் கிளைகோலை சேர்ப்பதால் தண்ணீரின், "உறைவெப்பம்" மேலும் குறைகிறது. அதாவது, ஒரு சதவீதம் எதிலின் கிளைகோல் சேர்க்கப்பட்ட தண்ணீர், நான்கு பாகை வெப்பத்தில் உறையாது; இதே எதிலின் கிளைகோலை, பியரிலும் சேர்க்கின்றனர்.



வருமானத்தையே குறியாகக் கொண்ட மிகப் பெரிய கம்பெனிகள், சில விஷயங்களைப் பற்றி கவலைப் படுவதில்லை. ஏனென்றால், நமது உயிரின் விலை மலிவு தானே!




✷ 1914ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி ஒரே ஒரு பயணியுடன் உலகின் முதல் விமானப் போக்குவரத்து துவங்கியது. அமெரிக்காவில் ப்ளோரிடாவின் டாம்பா .'. பேயிலிருந்து -. அப் ராம்.'.பெயில் என்ற இடத்திற்கு மொத்தம் 23 நிமிடம் பறந்தது. கட்டணம் 400 டொலர்.

✷ இன்று விமானங்களில் சராசரியாக தினமும் 8 மில்லியன் மக்கள் பயணிக்கிறார்கள். 2013இல் மொத்த பயணிகளின் எண்ணிக்கை... சுமார் 3.1.பில்லியன். இது முதல் தடவையாக 3 பில்லியனைத் தாண்டியுள்ளது. 2014இல் இது 3.3 பில்லியனாக உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது.

✷ வருடா வருடம் 50 பில்லியன் தொன் சரக்குகள் விமானங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுகிறது. இது மொத்த சரக்குகள் நடமாட்டத்தில் 36 சதவிகிதம் ஆகும். தின அளவில் சொன்னால் 1,40,000 தொன் அளவுக்கு பொருட்சுமை பயணிக்கிறது.

✷ விமானங்கள் மூலம் 57 மில்லிய்ன் வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த வேலைகள் மூலம் 2.2 ட்ரில்லியன் டொலர் பணப்புழக்கம் உள்ளது, இதில் நேரடியாக, வேலைகள் மூலம் உள்ள பொருளாதார பங்களிப்பு 540 பில்லியன் டொலர்.

✷ 2014இல் உலக விமான கம்பெனிகளின் வருமானம் 743 பில்லியன் டொலரைத் தொடும். பொதுவாக இதன் மூலம் அனைத்து விமான நிறுவனங்களும் 2.6 சதவிகிதம் லாபத்தை எட்டும்.


✷ 100ஆவது ஆண்டை கௌரவிக்கும் விதமாக... International Airtransport Association (IATA) உலகம் முழுவதும் விழா எடுக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

# தீவகத் தலைவாயில் வேலணையின் சிறப்புக்கள்

இலங்கையில் யாழ்.குடாநாட்டை அழகுபடுத்துவது தீவகப்பகுதியாகும். இத்தீவகப்பகுதியின் தலைவாயிலாக விளங்குவது வேலணையாகும். இக்கிராம மக்களின் பணப்பயிராக புகையிலை உற்பத்தியும் உணவுப்பயிராக நெற்செய்கை, காய்கறி உற்பத்தியும் மற்றும் பனை வளத்தினை பயன்படுத்தி கைத்தொழிலும் செய்கின்றனர்.1961ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தாம்போதிப்பாலத்தின் மூலம் யாழ். நகருக்கான தரைவழிப்பாதை விஸ்தரிக்கப்பட்டது.


இக்கிராமத்தில் தெங்கங்குளம், பெருங்குளம், சிலிந்தாக்குளம், கேணிக்கரைக்குளம், வேனாக்குளம் சிற்பனை கமரவெளிகுளம் என்பன ஆங்காங்கே காணப்படுகின்றன. அதற்கு மேலாக இங்குள்ள ஆலயங்களில் சின்னஞ்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக முன்பள்ளி அமைக்கப்பட்டு வகுப்புக்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. அத்தோடு அறநெறிப் பாடசாலையின் ஊடாக எல்லா மாணவர்களுக்கும் சமய பாட வகுப்புக்களும் முன்னெடுககப்படுகின்றன.

## முடிப்பிள்ளையார் தீர்த்தக்கேணி



உபயம் :- செல்லையர் குடும்பம்
காணி நன்கொடை :- பேரம்பலம் பராசத்தி குடும்பம்
இளைப்பாறுமண்டபம் :- செல்லையா வாத்தியார் குடும்பம்

**கோபுரம்**
உபயம் :- கணபதிப்பிள்ளை இராசதுரை (பிள்ளையார் விலாஸ்), கனடா வழிபடுநர் சபை



## வேலணைமேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் வரலாறும் வளர்ச்சி நிலைகளும்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குத்திசையிலே உள்ள தீவுக் கூட்டங்களுள் லைடன் jot முதன்மையானது.இங்கு உலகப்புகழ் பெற்ற இயற்கைத் துறைமுகம்களில் ஒன்றான ஊர்காவற்றுறை உண்டு இந்தத் தீவுகளுக்கெல்லாம் ஆட்சி புரியும் மணியகாரன் பதவிவகித்தோர் நிலைகொண்டிருந்த இடம் வேல்ணை என்பதால் தீவுகளுக்கு வேலணை ஒரு தலைநகர் போல விளங்குகிறது.வேலணை கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளை உடையது வேலணை மேற்கில் கோவில் கொண்டு எழுந்தருளி அடியவர்களுக்கு எளியவராகி அருள் புரிந்து- கொண்டிருக்கிறார் பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோவில் தாபிக்கப்பட்டிருக்கும் தலத்தின் பெயர் பெரியபுலம் என்பதாகும் இதனால் இவர் பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் என அழைக்கப்படுகிறார்.போர்த்துகேயர், ஒல்லாந்தர் காலங்களில் பல சைவக்கோவில்கள் இடித்து அழிக்கப்பட்டன என்பது வரலாறு அப்பொழுது அவர்களின் கைகளில் அகப்படாமல் முடியோடு நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற்று வந்தமையால் 'முடிப்பிள்ளையார்' என்ற சிறப்புப் பெயரும் இக்கோவிலுக்கு உண்டு. இந்த ஆலயத்தில் தாபிக்கப்பட்ட மூர்த்திக்கு மகாகணபதி என்று கும்பாபிஷேக காலத்தில் நாமகரணம் செய்யப்பட்டதனால் மகா கணபதிப்பிள்ளையார் என்றும் வழங்கப்படுகிறது.

### கல்விவளர்ச்சிக்காக உதவும் இக்கிராமப்பாடசாலைகள்

1. வேலணை மத்திய கல்லூரி
2. வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை
3. வேலணை சரஸ்வதி வித்தியாசாலை
4. வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்
5. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்
6. வேலணை செட்டிபுலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
7. வேலணை தெற்கு ஐயனார் வித்தியாசாலை
8. வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலை
9. வேலணை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை



வேலணை வர்த்தக நிலையங்கள்

## இக்கிரர்ம கல்வித்துறை வளர்ச்சி

இலங்கை சுதந்திரம் அடைய முன்னர் அரசாங்க சபையில் வலிகாமம் மேற்குத் தீவுப்பகுதிப் பிரதிநிதியாக பல ஆண்டுகள் இருந்து கடைசி பத்து வருடங்கள் தலைவராக (Speaker) இருந்து இலங்கையிலுள்ள சகல இனமக்களும் பாராட்டத்தக்கவராக இலங்கைத் தமிழ் மக்களும் சிறப்பாகத் தீவுப்பகுதி மக்களுக்கும் பெருமை தேடிக்கொடுத்தவர் வேலணையைச் சேர்ந்த சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி. வேலணை வங்களாவடியில் உள்ள இவரதும் இவரது குடும்பத்தினரதும் நிலங்களிலேயே வேலணை அரசினர் வைத்தியசாலை, தீவுப்பகுதி விவசாய உற்பத்தி விற்பனைச்சங்க அலுவலகம் தீவுப்பகுதி மின்சார விநியோக அலுவலகம் தீவுப்பகுதி மிருக வைத்தியசாலை அலுவலகம்,தீவுப்பகுதிக் கல்விக் கோட்ட அலுவலகம் - தீவுப்பகுதி தெற்கு வேலணைப்பிரிவு உதவி அரசாங்க அலுவலகங்கள் நிறுவப்பெற்று தீவுப்பகுதி மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுவருகின்றன.

சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமியும் அவரது குடும்பத்தினரும் யாழ்ப்பாணம் மணிக் கூட்டடியில் வாழ்ந்தாலும் தீவுப்பகுதி மக்களை நேசித்து வந்தவர்கள்.

1945 அளவில் கல்வி மந்திரியாக இருந்த C.W.W.கன்னங்கராவினால் இலங்கையிலுள்ள சகல மாணவர்களும் ஆங்கிலத்தை இலவசமாகக் கற்பதற்கு பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. வலி.காமம் மேற்குத் தீவுப்பகுதியில் காரைதீவில் இந்துக் கல்லூரியும் சுழிபுரத்தில் விக்ரோரியாக் கல்லூரியும வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியும் இருந்தமையால் தீவுப்பகுதி மாணவர்கள் ஆங்கிலம் கற்பதற்கு வசதியாக தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்திற்கு வசதியாக புங்குடுதீவு - யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை- மண்டைதீவு மக்களின் போக்குவரத்துப் பாதைகள் ஒன்றாகச் சந்திக்கும் வேலணை வங்களாவடியில் பாடசாலைஅமைப்பது பொருத்தமாக இருக்குமெனக்கருதப்பட்டு சேர்.வைத் தியலிங்கம் துரைசுவாமியின் ஆலோசனைப்படி கல்வி மந்திரி C.W.W. கன்னங்கராவும், சைவவித்தியா விருத்திச் சங்க முகாமையாளர் சு.இராசத்தினம், வேலணை வங்காளவடியில் இருக்கும் சரஸ்வதி வித்தியாசாலையை மத்திய கல்லூரியாக மாற்றியமைக்க எடுத்த முடிவைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமியின் சகோதரர் வை.பொன்னுத்துரை தலைமையில் கல்வி மந்திரியாக C.W.W.கன்னங்கரா சை.வி.வி. சங்க முகாமையாளர் சு.இராசத்தினம் பொதுமக்களும் சேர்ந்து ஒரு கூட்டம் கூடினர்.

மத்திய கல்லூரி அமைப்பது சம்பந்தமாகக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்காக வேலணைத் தபாலதிபர் திரு.நா.சரவணமுத்து தலைவராகவும் ஆசிரியர் திரு.சி.இராசத்தினம் செயலாளராகவும் மு.சி. சிற்றம்பலம் பொருளாளராகவும் கிராமரீதியாக தெரிந்த நிர்வாகசபை உறுப்பினர்களையும் கொண்ட வேலணை மகாசபை அமைக்கப்பட்டது. அதன்மூலம் எழுச்சி பெற்ற ஓர்பாடசாலையே வேலணை மத்திய கல்லூரி ஆகும்.





வேலணை மத்திய கல்லூரி நிகழ்சிகள்



# குழாய் பொருத்தி பலமாதங்களாகியும் குடிநீர் விநியோகம் கிடைக்கவில்லை


## வரணி மக்கள் ஆதங்கம்

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட வரணிப் பகுதிக்கு குடிநீர் திட்டத்திற்கு குழாய் பொருத்தும் பணி கடந்த வருடம்நடைபெற்றது. குழாய் பொருத்தி பல மாதங்கள் ஆகியும் குடிநீர் இதுவரை வழங்கப்படவில்லையென பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குழாய் மூலம குடிநீர் வராது என்றால் ஏன் குழாய் பொருத்தினார்கள் என்றும் கேள்வி எழுப்புகின்றனர். குடிநீர் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிப்பதோடு இந்த குடிநீர் திட்டத்தினை வரணி வடக்கு வரை நீடிக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்களின் தேவை கருதி வேம்பிராயில் இருந்து வரணிவடக்கு குடிநீர் திட்டத்தினை நீடித்து விரைவாக குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# பல்கலை மாணவிக்கு கணனி அன்பளிப்பு



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் யாழ்.பல்கலைக் கழக மாணவி ஒருவருக்கு கணனி அனபளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு இனிய வாழ்வு இல்ல மாணவியும் யாழ்.பல்கலைக் கழக இரண்டாம் வருட கலைப்பிரிவில் கல்விபயிலும் பிரியங்கா என்பவருக்கே இக்கணனி வழங்கப் பட்டுள்ளது.

மாணவியின் கல்வி நடவடிக்கைகளை மேலும் ஊக்குவிக்கும் முகமாக வட்டு இந்து வாலிபர்சங்க அவுஸ்ரேலியா கிளையினர் இதனை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கணனியினை வட்டு. இந்து வாலிபர் சங்க தலைமைச் செயலகத்தில் வைத்து சச்சியா இரும்பக உரிமையாளர் சி.சச்சிதானந்த ஐயர் மாணவியிடம் வழங்கிவைத்தார். (54)

# திசைகாட்டி இலக்கிய மன்றத்தின் எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக, அவர்களுடைய நூல்களை வெளியிட்டு உதவ திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக யாழ். மாவட்ட எழுத்தாளர்களுடைய சிறுகதைத்தொகுதி ஒன்று வெளியிடப்பட உள்ளது. ஏற்கனவே வெளியிடப்பட்ட தொகுதிகளில் இடம்பெற்ற சிறுகதைகள் கூடுமானவரை தவிர்க்கப்படும். இதுவரை நூலுருப்பெறாத சிறுகதைகளுக்குத் தெரிவில் முன்னுரிமை அளிக்கப்படும்.

தொகுதிக்கான சிறுகதைகளை திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் நியமிக்கும் தேர்வுக்குழு தெரிந்தெடுக்கும்.

நூல்களை அச்சிட்டும், வெளியிட இயலாத சூழ்நிலையிலுள்ள எழுத்தாளர்களுடைய நூல்களை வெளியிட திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் ஆதரவு வழங்கும்.

இவ்ஊக்குவிப்புத் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் எழுத்தாளர்கள், இணைப்பாளர், திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வெள்ளி நற்சிந்தனை...



# செய்யும் தொழிலே சிறந்த பூசை:

நாம் செய்யும் எந்த வேலையும் கீழானதல்ல. ஆனால் செய்கின்ற வேலையை மனஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். அதில் நம்மை முழுக்கவும் அர்ப்பணித்துக் கொண்டு செய்ய வேண்டும் அப்போது நாம் செய்யும் வேலை தெய்வீக வழிபாடு" என்கின்ற உயர் நிலை பெற்று விடும் ஆகவே தாங்கள் மேற்கொண்டுள்ள வேலையை வைத்து மேலானவர்கள் கீழானவர்கள் என்றோ எண்ணிக்கொள்ளத் தேவையில்லை.

மகாத்மாகாந்தி சிறைவாழ்வில் கழிவகற்றும் தொழிலை இன் முகத்துடன் தாம் செய்ததாக சத்திய சோதனையில் குறிப்பிடுகின்றார்.

பூசை செய்வதை எடுத்துக் கொள்வோம் யாருடைய பாராட்டைப் பெறுவதற்காகவோ அல்லது யாரையோ திருப்திப்படுத்துவதற்கென்றோ அதைச்செய்தால் அத்தகைய பூசையால் எத்தகைய பயனுமில்லை

ஒரு குடும்பப் பெண் தன்னுடைய அன்பின் மூலமாகத்தான் கணவனின் அன்பைப் பெற முடியும். ஒருபெண்ணின் கடமை குடும்பத்தைப் பராமரிப்பது தான் கணவனுக்குத் துணைவியாக இருந்து இல்லற தர்மத்தை நிறைவேற்ற எல்லா வகையிலும் அவனுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் அதுதான் அவள் செய்யக் கூடிய மிகப் பெரிய பூசை அதுதான் அவள் வெளிப்படுத்தக் கூடிய மிகச்சிறந்த பக்தி. இன்பத்திலும் துன்பத்திலும் எவள் ஒருத்தி முகம் கோணாமல் கணவனுக்குத் துணையாகவிருந்து காரியம் ஆற்றுகிறாளோ அவளே "பதிவிரதை "என்று அழைக்கப்படுகின்றாள்.

குடும்பத்தில் வாழ நினைக்கும் ஆண் குடும்ப வாழ்க்கைக்கும். உரியவனாக மனைவி மக்கள், விருந்தினர் ஆகியோரை சிறப்பாக வாழவைக்கும் துணையாக இருக்க வேண்டும். குடும்ப வாழ்க்கையில் தன் மனைவிக்கு அன்பு காட்டுவதே இல் வாழ்க்கையின் பண்பாகும். பிறரிடம் அறம் செய்வதே இல்வாழ்வின் பண்பாகும்.

"கடமையைச் செய் "எனும் கீதை வாசகம் நிறைந்த பொருள் கொண்டதாகும் உனது கடமையை முறைப்பழ செய்வாயாயின் அதற்குரிய பலன் இறை வனால் வழங்கப்படும்.

செய்யும் தொழிலை மதித்துச் செய் உரிய பலாபலன் உனக்குக் கிடைக்கும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

அசையும்போதே தோணி
அசையாதபோதோ தீவு
தோணிக்கும் தீவுக்கும் நடுவே
மின்னற்பொழுதே தூரம்
– **தேவதேவன்**

காற்றில்
விநோத நடனம் புரியும்
இலைகளைக்
கைவிரல்களால்
பற்றுகிறேன்.
ஒவ்வொரு முறையும்
இலைதான் சிக்குகிறது.
நடனம் மட்டும் எங்கோ
மறைந்துவிடுகிறது.
– **தேவதச்சன்**

ஆழ ஆழ போவதாக
நினைத்துக் கொண்டிருக்கையில்
அமிழ்ந்து போவதாக
பேசிக்கொண்டிருக்கிறார்கள்!
– **சே.பிருந்தா**

இந்த இரவும்
விடியும் என்று யாரோ
சொன்னதால் தான்
உறங்கச் செல்கிறேன்.
– **சரவணன் கன்னியாரி**

இறந்தவனின் ஆடைகளை
எப்படிப் பராமரிப்பதென்றே
தெரியவில்லை
இறந்தவனின் ஆடைகளை
அத்தனை சுலபமாய்
அணிந்துகொண்டுவிட முடியாது
அதற்காகவே
காத்திருந்தது போலாகிவிடும்
அவை
இறந்தவனின் இடத்தில்
இருந்துவிட்டுப் போகட்டும்
என்றிருக்க இயலாது
இறந்தவர்களோடு
அவ்வளவு இயல்பாய்
உறவுகள் சாத்தியமல்ல
தானமெனக் கொடுக்கலாமெனில்
இறந்தவனின் சாயல்கள்
எதிர்பாரா இடங்களில்
எதிர்பாரா உடல்களிலிருந்து
நம்மை நோக்கி வரும்
இறந்தவனின் ஆடைகளை
அழித்துவிடலாம்தான்
இறந்தவனைத்
திரும்பத் திரும்ப அழிக்க
கைகள் நடுங்குகின்றன
இறந்தவனின் ஆடைகள்
ஆடைகள் போலில்லை
இறந்தவனின் தோலாக இருக்கிறது.
– **மனுஷ்ய புத்திரன்**

வெயிலை உதிர்க்கிறது
மரத்தின் கிளை.
குதித்தோடுகின்றன
நிழல் பூக்கள்.
– **கல்பனா ரத்தன்**

இருந்து என்ன ஆகப்போகிறது?
செத்துத் தொலைக்கலாம்.
செத்து என்ன ஆகப் போகிறது?
இருந்து தொலையலாம்.
– **கல்யாண்ஜி**

சந்திவிளக்கோ இருட்டைத்
தறித்து வேட்டை ஆடும்
அங்கு பறக்கும் ஈசல்
ஆவி கொறிக்க வெளவால்
வந்து பறக்குமு் கீழே
வாயில் எச்சில் ஊற
குந்தி இருக்கும் பூனை
குறித்து வெளவால் உயிரை!
ஒன்றின் உயிரில் ஒன்று
உலகே வேட்டைக் காடு!
– **மு.பொ.**

பனி விழும் இரவல்ல
வேர்வையின் துளிகள்
உடலெங்கும் பூத்திருக்க
அறையெங்கும் வீசிக்கிடக்கும்
நாற்றத்துக்குள்ளிருந்து
கடவுள் என்பவன் பேசிய குரலது
எப்போதோ அறிந்திருந்த மொழியென
ஒரு யோசனை
எப்போதும் புரிந்திராத மொழியென
ஒரு திடுக்கிடல்
கடவுள் தெளிவாகப் பேசினான்
என் குற்றங்களைப் பட்டியலிட்டான்
நான் புரண்டு புரண்டு படுத்தேன்
காதுக்கருகில் வந்து அவன்
சொல்லிக்கொண்டே போன்
முடிவற்ற பட்டியலில்
அச்ச வேர்வைகள்
பெருக பெருக
அவனுக்குக் களியாட்டம்
சைகையில் அவனை
அடக்கமுடியவில்லை
மிரட்டலுக்கும் மசியவில்லை
மெல்ல விசும்பலும்
பிறகு கதறலுமென
காற்றில் வீசப்பட்ட
என்னுடலில்
ஊழித் தாண்டவம்
காறித் துப்பினேன்
அதையும் குற்றப் பட்டியலாக்கினான் அவன்
ஒரே ஒரு கேள்வி கேட்க மன்றாடினேன்
காலில் விழுந்து
புரண்டழுததும்
மெல்லப் புன்னகைத்தான்
நீயெல்லாம் கடவுளா என்றேன்
விடியத் தொடங்கியது வானம்.
– **ஹரன்பிரசன்னா**

எவ்வளவு கருணை நிரம்பியது
சிறு பறவையின்
அநாயாசப் பறத்தலை
அந்த ஆமை
பார்க்கவில்லை என்பது.
– **அப்பாஸ் கியரோஸ்தமி**

வாயார உண்டோர்
வாழ்த்துவதும்
நொந்த பேர்
வைவதுவும்
எங்கள் உலகம்.
– **தாயுமானவர்**

பல நாள் திருடன் நான்
இறந்து கிடக்கிறேன்
என்னை ஒரு நாளும்
அகப்படாமல் இறக்கச் செய்தீர்
ஸ்தோத்ரம் ஆண்டவரே
சில ஈக்களை அனுப்பி என்
முகத்தின் திருட்டுக் களையை
பறந்து போகப்பண்ணினீரே
ஸ்தோத்ரம் ஆண்டவரே
யோக்கியத்தின் கல்லிலிருந்து
என்னை தப்புவித்தீர்
கருணையின் ராஜா!
உமக்கு நன்றி ஐயா
– **இசை**

வீடென்பது கனவு
வெளியென்பது எதார்த்தம்
வீடும் வெளியுமாய்த்தான்
விளங்குகிறது உலகம்
– **விக்கிரமாதித்யன்**

# மாணவனைத் தாக்கிய ஆசிரியர் சிறுவர் நீதிமன்றுக்கு அழைப்பு

மாணவனொருவரைத் தாக்கியதாக வழங்கப்பட்ட முறைப்பாடொன்றின் அடிப்படையில் மானிப்பாயில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையமொன்றின் ஆசிரியர் விசார்ணைகளுக்காக சிறுவர் நீதிமன்றிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

குறித்த சம்பவம் பொங்கல் தினத்தன்று இடம்பெற்றுள்ளது. தனியார் கல்வி நிலைய வளாகத்திற்குள் பொங்கல் தினத்தன்று சிலரால் வெடிகள் கொழுத்தி போடப்பட்டுள்ளது. போடப்பட்ட வெடிகளில் ஒன்று குறித்த தனியார் கல்வி நிலையத்தின் நிர்வாகியின் காலிற்கருகில் விழுந்து வெடித்துள்ளது. இதனையடுத்து அருகிலிருந்த அங்கு கற்பிக்கும் ஆசிரியர் மாணவனொருவர் மீது காட்டு மிராண்டித்தனமாக தாக்குதல் நடாத்தியுள்ளார். எனினும் குறித்த மாணவன் வெடி கொழுத்தவில்லை.

குறித்த தனியார் கல்வி நிலையத்திற்குள் மாணவன் வெடி கொழுத்திப் போட்டான் என்ற சந்தேகத்தில் ஆசிரியரால் நையப்புடைக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் பிரதேச செயலக நன்நடத்தை உத்தியோகத்தரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடடின் அடிப்படையில் சுண்டுக்குளியில் அமைந்துள்ள சிறுவர் நீதிமன்றிற்கு மேற்படி சம்பவம் பாரப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்தே குறித்த ஆசிரியரை விசாரணைகளுக்காக ஆஜராகுமாறும், பாதிக்கப்பட்ட மாணவனை மருத்துவச் சான்றிதழ்களுடன் சமூகமளிக்குமாறும் சிறுவர் நீதிமன்றினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (48)

# ஆனைவிழுந்தான் வயற்காணிகள் நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உறுதியளிப்பு



ஆனைவிழுந்தான் குளத்தின் கீழ் தொடர்ச்சியாக கடந்த காலங்களிலிருந்து பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு அந்தக் காணிகள் அவர்களது வாழ்வாதார மேம்பாட்டினை நோக்காக கொண்டு நியாயமான முறையில் சட்ட ரீதியாக பகிர்ந்தளிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியில் மக்கள் நீண்டகாலமாக நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் வயற்காணிகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

யுத்தப்பாதிப்புக்களிலிருந்து எம் மக்களை மீட்டெடுத்து அவர்களுக்கான வளமான வாழ்க்கையினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அந்த வகையில் ஆனைவிழுந்தான் குளத்திற்கு கீழ் உள்ள கிட்டதட்ட 400 ஏக்கா வயறகாணிகளில் இந்தப் பிரதேச மக்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபடும்போது அது அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழியமைக்கும். மேலும ஆனைவிழுந்தான் குளத்தினை புனரமைக்கவும் நாம் எம்மாலான நடவடிக்கைகளை மேற கொள்வோம் குறிப்பாக வயற் காணிகளை துப்பரவு செய்வதற்காக அரசின் நிதியினைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. அந்த நிதி கிடைக்கும் போது இந்த மக்களைக் கொண்டே காசுக்கான வேலை போன்று நிலங்களை துப்பரவு செய்யும் பணி மேற்கொள்ளப்படும்.

இந்தப் பிரதேசத்தின் அடிப்படைத தேவைகளை பூர்த்தி செய்வதில் கடந்த காலம் போன்று எதிர்காலத்திலும் எங்களின் பணி தொடரும். முக்கியமாக இரண்டு அங்கத்தவர்களுக்கான வீட்டுத் திட்டம் ஒன்றை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் பல இடங்களில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவை கைகூடும் போது ஆனைவிழுந்தான் ஜெயபுரம் போன்ற பிரதேசங்கள் உள்ள பல இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட வறிய நிலையில் வாழ்கின்ற மக்களிற்கு பெரும் உதவியாக அமையும். இதே போன்று மின்சாரம் வீதி உள்ளிட்ட பல விடயங்கள் எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இவை தொடர்பிலும் முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவோம் என்றார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரகலாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சபாநாயகம், கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தின் உதவி ஆணையாளர் தயாரூபன் காணி உத்தியோகத்தர் வசிகரன்,கிராம அலுவலர் சபாநாதன், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், கமக்கரா அமைப்பின் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்துக் கோயில் நிர்வாகிகளுடன் கரைச்சியில் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசதில் இந்துக் கோயில்களின் நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு நடைபெற்றது.

இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இந்து ஆலயங்களின் நிர்வாகிகள்,கிராம அலுவலர்கள் யாவரும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலகத்தின் தலைமைப்பீட கிராம அலுவலர் கனகையா மகேந்திரன் இந் நிகழ்வை வழிப்படுத்தினார்.

பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ். ஜெயமதி இந்து ஆலயங் கள் பதிவு செய்யப்பட வேண் டிய அவசியம் பற்றியும்,இந்து ஆலயங்களில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளின் பதிவு மற்றும் செயற்பாடு தொடர்பாகவும் விரிவாக எடுத்துக் கூறினார்.

பதிவு செய்யப்பட்ட ஆலயங்களுக்கு மட்டுமே இந்து கலாசார அமைச்சு உதவித் தொகைகளை வழங்கு மெனவும் இக் கலந்துரையாட லில் ஆலய நிர்வாகிகளுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டது (90)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



ஆணையூர் இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

இதில் சண்டிலிப்பாய் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், சண்டிலிப்பாய் இளைஞர் சம்மேளனத்தின் அமைப்பாளர் அ.ஜெபநேசன் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி இ.நவசக்தியா பாடசலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆனையூர் இளைஞர் கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (48,114)

## 5 வயதுக் குழந்தையை தாக்கியவருக்கு கடூழியச் சிறை

தனது 5 வயது பெண்குழந்தையை விறகுக்கட்டையால் தாக்கினர் என குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு 3 மாத கடூழியச்சிறைத்தண்டனையும், 1000ரூபா தண்டப்பணமும் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்தே மேற படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (170)

# இந்திய எண்ணெய் நிறுவன எரிபொருள் விலைகள் உயர்வு

## கனியவள கூட்டுத்தாபன சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)


இலங்கையில் இந்திய எண்ணெய் நிறுவனம் உயர்ந்த விலையில் எரிபொருட்களை விற்பனை செய்து வாடிக்கையாளர்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்குவதாக கனியவளக் கூட்டுத்தாபனத்தின் சுதந்திர சேவையாளர் சங்கத் தலைவர் பந்துல சமன்குமார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்திய எண்ணெய் நிறுவனமும், இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனமும் ஒரே விலையில் எரிபொருட்களை இறக்குமதி செய்கின்றன.

ஆனால், இந்திய நிறுவனம் இறக்குமதி செய்யும் டீசல் மற்றும் பெற்றோலுக்கு இரசாயனப் பொருட்களைக் கலந்து மாறுபட்ட பெயர்களில் அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றது' என்றார்.

எரிபொருட்களின் தன்மையை மேம்படுத்துவதற்காகவே லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருட்களில் பலவித இரசாயனப் பொருட்களை கலப்பதாக அவர் தெரிவித்தார்.

வாகன இயந்திரங்களின் செயல்திறனை அதிகரிப்பது மாத்திரமே இதனூடாக இடம் பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.





கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சி பாடசாலைக்கான புதிய மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. பூஜை வழிபாடுகள் இடம்பெறுவதையும் அடிக்கல் நாட்டுவதையும் காணலாம். (48)


# சிங்கள மொழி வகுப்புக்கள்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் பளை பிரதேச செயலகப் பிரிவில் சிங்கள மொழி வகுப்புக்கள் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பளை நகர கிராம அலுவலர் பிரிவில் இந்த வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றது.

அரசின் மும்மொழி கொள்கையை நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

சனி,ஞாயிறு தினங்களில் இந்த வகுப்புக்களில் விருப்பமான யாவரும் கலந்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (90)



# க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

## வரலாறு

பகுதி - I - II

2 மணி



1) இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய அரசுகளில் "அரசியல் நிலையில் துரித வளர்ச்சி" ஏற்படக் காரணமாக அமைந்தவர்களுள் முக்கியமானவர்கள் யார்?

1) ஒல்லாந்தர் 2) போர்த்துக்கேயர்
3) பிரித்தானியர் 4) ஆரியர்கள்

2) பல்வேறு நாடுகளில் இருந்து வந்த கப்பல்களினால் இலங்கையின் "மகாதித்த" துறைமுகம் நிரம்பியிருந்தது என கொலம்பஸ் என்ற பெயருடைய வெளிநாட்டவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் வெளிப்படுத்தப்படும் பிரதான விடயம்

1) கப்பல் சேவையில் இலங்கை முக்கிய இடம் வகித்தது.
2) புராதன காலத்தில் உல்லாசப்பயணிகள் பெருமளவில் வந்தனர்
3) அக்காலத்தில் இலங்கை முக்கிய வர்த்தக நிலையமாக விளங்கியது.
4) பருவக்காற்று, நீரோட்டங்கள் என்பவற்றின் உதவியில் இலங்கை வரமுடிந்தமை.

3) இலங்கையில் "பிரித்தானியர் ஆட்சி" தொடர்பான பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.

1) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமை
2) கைத்தொழில், விவசாயம் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தியமை
3) அரசியல் யாப்புக்களில் வளர்ச்சி நிலை ஏற்பட்டமை
4) ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமை

4) பிரித்தானியரால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை செய்கைக்கு தேவையான காணிகளைப் பெற்றுக்கொண்டமை பின்வரும் எவ்வழி முறையினால்?

1) தரிசு நில சட்டத்தின் மூலம் காணிகளை அரசுடைமையாக்கியமை
2) கபாடகம், நிர்த்தகம் ஆகியவற்றை ரத்து செய்ததன் மூலம்
3) மலைநாட்டில் நிலவிய இராஜகாரிய முறையை ஒழித்து விட்டதன் மூலகம்
4) காணி உரிமையாளர்களுடன் பேசி காணிகளை கொள்வனவு செய்தமை.

5) மலையகப் பகுதியில் 1815 இல் ஆரம்பித்த பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக மக்கள் அதிருப்தி கொண்டமைக்கு காரணமாக அமைவது.

1) கண்டி மக்களின் பாரம்பரியங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் பிரித்தானியர் மதிப்பளிக்காமை
2) ஸ்ரீ விக்கிர ராஜசிங்கனை நாடு கடத்தியமை
3) நாயக்கர் பிரித்தானியரின் அதிகாரங்களை நீக்கியமை
4) புதியவரி நடைமுறைகளை நீக்கியமை.

6) இலங்கையின் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான முக்கிய ஆண்டுகள் சில நிரல் II இல் தரப்பட்டிருப்பதோடு அவற்றுக்குரிய அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் நிரல் I இல் காட்டப்பட்டுள்ளன. நிரல் I இல் உள்ள ஒழுங்கிற்கு ஏற்ப நிரல் II இல் உள்ளவற்றை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II | |
|---|---|---|
| A - சர்வஜன வாக்குரிமை வழங்கப்படல் | E | - 1912 |
| B - முதலாவது தேசாதிபதி நாயகம் நியமிக்கப்படல் | F | - 1947 |
| C - சட்டவாக்க கழகம் ஆரம்பிக்கப்படல் | G | - 1833 |
| D - பாராளுமன்றம் நிறுவப்படல் | H | - 1931 |
| | I | - 1948 |

1) E,F,G,H 2) H,I, G,F
3) F, G, H, I 4) I, G, F, G

7) அரசியலமைப்பு பணிகளுக்காகப் பிரதிநிதிகள் சபையும் செனற்சபையும் கொண்ட இருமன்றப் பாராளுமன்ற முறைமை முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்டது.

1) 1947 சோல்பரி யாப்பு 2) 1921 மனிங் யாப்பு
3) 1931 டொனமூர் யாப்பு 4) 1833 கோல்புறூக் யாப்பு

8) இலங்கையில் டொனமூர் யாப்பின்படி தேசியத்தலைவர்கள் செயற்பட்ட பணி

1) நிதி 2) நிர்வாகம்
3) நீதிமன்றம் 4) யாப்பு சீர்திருத்தம்

9) A - இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படல்.
B - உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகரிக்கப்பட்டமை.
C - பொருளாதார துறையில் அரசின் ஏகபோக உரிமை ஒழிக்கப்பட்டமை.
D - பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
E - நிர்வாகக் குழுமுறை அறிமுகம்.
F - இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை

மேலே A,B,C,D,E,F என்பவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள சிபார்சுகளில் கோல் புறூக் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள் யாவை?

1) A,C,E 2) B,D,F 3) A,C,F 4) A,B,C

10) இலங்கையில் பிரித்தானியர் மேற்கொண்ட ஆட்சிகளில் பின்வருவனவற்றில் அடங்காதது எது?

1) ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பனியின் ஆட்சி
2) இரட்டை ஆட்சி
3) முடிக்குரிய ஆட்சி
4) சனநாயக சோசலிச குடியரசின் ஆட்சி

11) திருகோணமலைத் துறைமுகத்தின் சிறப்புக்களிற்குள் பின்வருவனவற்றில் அடங்காதது எது?

1) இயற்கையான துறைமுகம்
2) பல கப்பல்களை நிறுத்தும் வசதி
3) இரு பருவக்காற்றுக்கால பகுதிக்கும் சிறந்தது.
4) மறைவாக கப்பல்களை நிறுத்தி வைப்பதற்கு ஏற்றதாக அமையாமை

12) கோல்புறூக் யாப்பின் பரிந்துரைகளில் அடங்காத விடயம் யாது?

1) இராஜகாரிய முறையை ஒழித்தல்
2) மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் முறை அறிமுகம்
3) 5 மாகாணங்கள் உருவாக்குதல்
4) சட்டவாக்கக்கழகம் உருவாக்கப்படல்

13) டொனமூர் யாப்பின்படி அமைச்சரவைக்கு தலைவராக செயற்பட்டவர் யார்?

1) மக்கள் அரசியல் அறிவு பெற்றனர்
2) சமுதாய ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட்டமை
3) சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை
4) மக்களின் வாழ்க்கைத்தர வளர்ச்சியில் ஸ்தம்பிதம் ஏற்பட்டமை

14) 1848 ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத் தலைவர்களுள் சிங்களவர்களின் வீர புருசன் என அழைக்கப்படுபவர் யார்?

1) வீரபுரன் அப்பு 2) குடாபொல தேரர்
3) கொங்காலே கொடபன்டா 4) மடுகல்ல நிசாவை

15) பிரித்தானியர்கள் 1815 இன் கண்டி உடன்படிக்கையை மீறியமையால் ஏற்பட்ட விடயம் பின்வருவனவற்றில் எது?

1) இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தமை
2) 1818 ஆம் ஆண்டு முதலாவது சுதந்திரப்போர் நடந்தமை
3) 1848 ஆம் ஆண்டு இரண்டாவது சுதந்திரப்போர் நடந்தமை
4) மக்கள் மன்னன் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் பக்கம் சார்ந்தமை

16) ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றைக் கற்பதற்கான ஒரு மூலமாக மகாவம்சத்தின் முக்கியத்துவத்தை மிகச் சரியாகக் காட்டும் கூற்று யாது?

1) எழுத்துருவ மூலமாக மகாவம்சத்தில் வரும் எல்லாத் தகவல்களையும் சரியாகக் கருதலாம்.
2) பண்டைய அரசர்கள் தொடர்பாகக் குறிக்கப்பட்ட தகவல்களை மாத்திரம் சரியாகக் காட்டும் மூல நூலாக மகாவம்சம் முக்கியத்துவம் வாய்ந்தது.
3) மகாவம்சத்தில் வரும் பல தகவல்கள் ஏனைய மூலங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றமையால் எழுத்துவ வரலாற்று மூல நூலாக முக்கியத்துவம் வாய்ந்தது.
4) மகானாம என்ற தேரரின் பெயரில் எழுதப்பட்டிருப்பதனால் சமய வரலாறு தொடர்பான தகவல்களை மாத்திரம் சரியாகக் காட்டும் மூலமாக முக்கியத்துவம் வாய்ந்தது.

17) புராதன நீர்ப்பாசனத் தொழிநுட்பவியல் உன்னத அம்சமாகக் கருதப்படும் கலிங்கற்றொட்டியின் மூலம் நிறைவேற்றப்பட்ட பிரதான தொழில்

1) வாவி அணைக்கட்டிற்குக் குறுக்கே மடைக்கதவில் உண்டாகும் நீர்முக்கத்தைச் சமப்படுத்தல்.
2) வாவியில் உள்ள மேலதிக நீரை வெளியேற்றல்.
3) வாவியியில் அலையடிப்பினால் வாவி ஆணைக்கட்டு கழுவப்படுதலைத் தடுத்தல்.
4) வாவியில் சேரும் வண்டல் கால்வாயில் பாய்தலைத் தடுத்தல்.

18) பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு அரசியல் திட்டங்களில் இலங்கை மக்களுக்கு அரைகுறை பொறுப்பாட்சியை வழங்கிய அரசியல் சீர்திருத்தம்.

1) கோல்புறூக் 2) டொனமூர்
3) சோல்பரி 4) மக்கலம்

19) இலங்கையில் உள்ள கல்பொத்த கல்வெட்டு பற்றிய கூற்றுக்களுள் சரியான கூற்று

1) இது ஒரு குகைக் கல்வெட்டாகும்.
2) இது ஒரு சுவர் கல்வெட்டாகும்.
3) இது ஒரு தூண் கல்வெட்டாகும்.
4) இது ஒரு குன்றுக் கல்வெட்டாகும்.

20) தப்ரபேண், செரண்டிப், தம்பபண்ணி என இலங்கையை அழைத்தல் அந்நிய இனத்தவர்கள் முறையே

1) கிரேக்கர் இந்தியர், அராபியர்
2) கிரேக்கர், அராபியர், இந்தியர்
3) அராபியர், கிரேக்கர், இந்தியர்
4) இந்தியர், கிரேக்கர், போர்த்துக்கேயர்

21) புராதனகால கண்டிய பொருளாதாரத்தில் காணப்பட்ட அம்சங்களுள் உள்ளடங்காதது

1) நுகர்வுப் பொருளாதாரமுறை காணப்பட்டது.
2) வீட்டுத்தோட்டம் சேனைப்பயிர்ச் செய்கைகள் முதன்மை பெற்றது.
3) தேவைக்கு அதிகமான அளவு உப்பு, கருவாடு, புகையிலை என்பன கிடைத்தது.
4) பணப்புழக்கம் சிறிய அளவு காணப்பட்டது.

22) கி.பி 1638, 1766 ஆகிய ஆண்டுகளில் ஒல்லாந்துடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திய இரு கண்டி ஆட்சியாளர்களும் யாவர்?
1) முதலாம் விமலதர்ம சூரியனும் இரண்டாம் விமலதர்ம சூரியனும்
2) இரண்டாம் இராஜசிங்கனும் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனும்
3) செனரத்தும் இரண்டாம் விமலதர்ம சூரியனும்
4) ஸ்ரீநரேந்திர சிங்கனும் ஸ்ரீ விஜயஇராஜசிங்கனும்

23) நிரல் X இல் இலங்கையில் ஆட்சி செய்த சில அரசர்களின் பெயர்களும் நிரல் Y யில் இவர்கள் காலத்திலே இலங்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளும் காணப்படுகின்றன. நிரல் X ஐ நிரல் Y உடன் பொருத்தும் போது சரியான விடை யாது?

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. தேவநம்பிய தீசன் | A. தந்ததாது கொண்டு வரப்பட்டமை |
| 2. வலகம்பா | B. தூபராமாவைக் கட்டுவித்தமை |
| 3. கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன் | C. மிரிசவசட்டியை கட்டுவித்தமை |
| 4. முதலாம் பராக்கிரமபாகு | D. திரிபீடகத்தை எழுதுவித்தமை |
| | E. மூன்று நிக்காயாக்களை இணைத்தமை |
| | F. அட்டகதாபை பாளியில் மொழிபெயர்த்தமை |

1) A,C,D,E ஆகியோர் 2) B,D,A,E ஆகியோர்
3) A,B,D,E ஆகியோர் 4) A,B,C,F ஆகியோர்

24) வசபன், மகாசேனன், மகாபராக்கிரமபாகு என்ற அரசர்களின் பணிகள் தொடர்பான பொது இயல்பு யாது?
1) வெளிநாடுகளிலிருந்து பிக்குகளை அழைத்து வந்து குருப்பட்டம் அழித்தல்
2) நீர்ப்பாசனத்தின் விரிவாக்கத்துக்கு அளப்பரிய சேவையை அழித்தல்.
3) தென்னிந்தியப் படையெடுப்புக்களிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்.
4) இலங்கையை ஒனறுபடுத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளல்.

25) புராதன நீர்ப்பாசன வல்லுநர்கள் நுண் சாய்வுடன் கால்வாய்களை அமைக் கையில் நுண்ணளவீட்டு முறைகளைப் பயன்படுத்தியமைக்குத் தரத்தக்க சிறந்த உதாரணம்.
1) அனுராதபுர, ரன்மசு தோட்டத்திற்கு நீரை வழங்கும் குடை வழி (சுருங்கை) நீர் வழித்தொகுதி.
2) கலாவாவி, திசாவாளி என்பவற்றைத் தொடுக்கும் யோத கால்வாய்
3) புராதன மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து பண்டைய கலிங்கல் தொட்டி
4) சிகிரியாக் குன்றைச் சுற்றி அமைத்த நீர் அகழி

## பகுதி II

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிக்க**

01) நாட்டில் செழிப்பு நிலை காணப்பட்ட காலங்களில் நாணயங்கள் செய்யப்பட்ட உலோகம்
1) தங்கம் 2) வெள்ளி 3) செப்பு 4) தகரம்

02) கி.பி. 640 இல் இந்தியாவுக்கு விஜயம் செய்த சீன தேச சஞ்சாரி யார்?
1) ஹியூங் சாங் 2) பாகியன்
3) மெகஸ் தனிஸ் 4) சென் ஓ

03) இருது சங்காரம் சாகுந்தலம் என்பன எக்கால இலக்கியங்கள்
1) மௌரிய 2) சோழ
3) குப்த 4) பல்லவ

04) படதொலலேன பாகியன்கல குருகல் ஹின்ன என்பன முக்கியம் பெறுவது
1) பெரிய குகைகள் உள்ளதால்
2) உல்லாசப் பிரயாணிகளுக்குரிய இடமென்பதால்
3) வரலாற்றுக்கு முந்திய இடுகாடுகள் உள்ளதால்
4) வரலாற்றுக்கு முந்திய இலகு ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டதால்.

05) திசாவாவியிலிருந்து ரன்மசு பூங்காவிற்கு நீர் கொண்டு செல்ல சுரங்க நீர் கால்வாய் கட்டிய மன்னன்
1) தேவநம்பிய தீசன் 2) வசபன்
3) தாதுசேனன் 4) மகாசேனன்

06) புத்சரண தம்சரண சங்க சரண என்னும் நூல்கள் பொலநறுவக் காலத்தில் யாரால் எழுதப்பட்டன
1) குமாரதாச 2) குருலுகோமி
3) வித்யாசக்கரவர்த்தி 4) மகாநாம

07) 1 ஆம் புவனேகபாகு காலத்தில் புனித தந்த தாதுவை அபகரித்தவர் யார்?
1) பாண்டியர் 2) 3 ஆம் பராக்கிரமபாகு
3) சோழர் 4) 2 ஆம் புவனேகபாகு

08) தெங்குச் செய்கைக்கு அனுசரணை வழங்கிய மன்னன் யார் ?
1) 2 ஆம் பராக்கிரம பாகு 2) 1 ஆம் புவனேகபாகு
3) 4 ஆம் பராக்கிரமபாகு 4) 3 ஆம் விஜயபாகு

09) அடிமை அரச வம்சத்தின் முதல் மன்னன் யார் ?
1) மகமுத் 2) இல்துத்மிஸ்
3) குதுபுதீன் 4) பல்பன்

10) கல்தான் அரசு வீழ்ச்சியடையப் பிரதான காரணம் யாது ?
1) நிர்வாகசிக்கல்
2) உள்நாட்டுக் கலகம்
3) கொடுமையான ஆட்சி
4) தலைநகரம் மாற்றப்பட்டமை

11) பாமியன் புத்தர் சிலை காணப்படும் நாடு
1) சீனா 2) அப்புகானிஸ்தான்
3) மியன்மார் 4) மொங்கோலியா

12) "நிலத்தை அனுபவிப்பதற்காக பொறுப்புகளை நிறைவேற்றல்" என்னும் முறைமை எங்கு காணப்பட்டது
1) மானியமுறை 2) பிரபுக்களின் ஆட்சி
3) சர்வாதிகாரமுறை 4) ஆசியாவில்

## பகுதி II

1.1) இங்கு (1) (2) (3) (4) ஆகிய இலக்கங்களால் காட்டப்பட்டிருப்பவர்கள் இலங்கையின் தேசிய சமய கலாசார முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்தோராவார் அவர்களுடன் தொடர்புடைய நான்கு விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன ஒவ்வொரு விடயத்திற்கு எதிரே புள்ளிக் கோட்டில் எழுதுக


1)


2)


3)


4)

1.2) மருதானை சாஹிராக் கல்லூரியை ஆரம்பிப்பதில் முன்னோடியாக திகழ்ந்தவர்

A. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் பிரதான அமைப்பாக மகாபோதி சங்கத்தை ஆரம்பித்தவர் (.................)

B. சட்டவாக்கழகத்திற்குத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் (.................)

C. இந்து கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் முதன்மை வகித்தவர் (.................)

02) பின்வருவனவற்றோடு தொடர்புடையவர்களை புள்ளிக்கோட்டில் எழுதுக
அ. இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்து விலகி தமிழ் மகா சபையை நிறுவியமை (.................)
ஆ. பௌத்த கொடியின் தோற்றம் (.................)
இ. போயா விடுமுறை (.................)
ஈ. ஞானதீபம் சஞ்சிகை வெளியிட்டமை (.................)

**பின்வருவனவற்றுக்கான இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாதத் தலைவர்களின் பெயரினைக் குறிப்பிடுக**

03)
1. இந்தியாவின் முதுப்பெருங்கிழவர் (.................)
2. காந்தி என் அரசியல் குரு என்றவர் (.................)
3."வங்காளம்" பத்திரிகையின் ஆசிரியர் (.................)
4. "உலக அபிமானி" என அழைக்கப்பட்டவர் (.................)

2.
A. கோல்புறூக் அரசியல் யாப்பு
B. இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாகியமை
C. 2 ஆவது அரசியல் குடியரசு யாப்பு என்பன இலங்கையில் தாக்கம் செலுத்திய ஆண்டுகள் எவை என ஒழுங்கில் தருக ?

2. 1818 இல் நடைபெற்ற கலகத்துக்கு ஏதுவாக இருந்த காரணிகள் நான்கு குறிப்பிடுக

3. நிர்வாகம் தொடர்பாக 1833 இல் முன்வைக்கப்பட்ட விதந்துரைகள் இரண்டைக் கூறி அவற்றினை விளக்குக

4. ஆங்கிலேயர் காலத்திற்கு பரவிய பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை காரணமாக மத்திய மலைப்பிரதேசங்களில ஏற்பட்ட 2 பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துக

3. 1) பிரித்தானியா ஆட்சியின் போது இலங்கையின் மலைநாட்டுப் பகுதிகளில் அறிமுகப்படுத்திய பெருந்தோட்டப் பயிர்கள் இரண்டைப் பெயரிடுக
2) பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையின் முன்னேற்றத்திற்கு வழிகோலிய கோல்புறூக் சீர்திருத்தத்தின் இரண்டு சிபார்சுகளை குறிப்பிடுக
3) பிரித்தானியா ஆட்சியின் போது விருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கையின் அபிவிருத்திக்கு எந்தளவுக்கு பங்களிப்புச் செய்துள்ளதென்பதை இரண்டு உதாரணங்கள் கொண்டு விளக்குக

4) இலவசக் கல்வியின் தந்தை எனக் கருதப்படும் (கன்னங்கரா அவர் களின் சில ஆலோசனைகள் தற்கால இலங்கைக் கல்வியின் முறைமையில் இன்னும் செயற்படுத்தப்படுகின்றன. நீர் அனுபவிக்கும் கல்வி வாய்ப்புக்கள் இரண்டினூடாக மேற்கூறிய கூற்றை நியாயப் படுத்துக

# கைத்தொழில் மேம்பாட்டில் அமைச்சர் டக்ளஸ்

## மல்பா தொழிற்சாலை



ஜாஎலப் பகுதியில் அமையப் பெற்றுள்ள மல்பா தனியார் தொழிற்சாலையின் தொழிற்துறை நடவடிக்கை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

ஜாஎலப் பகுதிக்கு கடந்த 29 ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குறித்த தொழிற் சாலையின் தொழிற்துறை நடவடிக்கை தொடர்பில் ஆராய்ந்தார். தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்ட அமைச்சர் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

இதில் மீன்பிடி வலை மற்றும் நைலோன் கயிறு உற்பத்திகளின் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் அமைச்சர நேரில் சென்று பார்வையிட்டு அறிந்து கொண்டார்.

குறிப்பாக தனியார் துறையூடாக அமைச்சின் கீழான வடகடல் நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் குருநகர், வீரவில மற்றும் லுணுவில பகுதிகளில் இயங்கிவரும் மீன்வலை உற்பத்தி தொழிற்சாலைகளினது தொழிற்துறை நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் நன்மைகள் தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க ஆகியோர் உடனிருந்தனர்.

## நவம் லங்கா தொழிற்சாலை



மீரிகம சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள நவம் லங்கா தனியார் தொழிற்சாலையின் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் விஜயம் மேற்கொண்டு ஆராய்ந்தார்.

மீரிகம பகுதிக்கு கடந்த 29 ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குறித்த தொழிற்சாலையின் தொழிற்துறை நடவடிக்கைகளை நேரில் ஆராய்ந்தார்.

குறித்த தொழிற்சாலையில் ஈயத்தை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்திகள் முன்னெடுக்கப்பட்டு அவை ஏனைய பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தொழிற்சாலையின் பல்வேறு பிரிவுகளையும். பார்வையிட்ட அமைச்சர் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் துறைசார்ந்தோரிடம் கலந்துரையாடி கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது ஏனைய விடயங்கள் தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தினார்.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க ஆகியோர் உடனிருந்தனர்.

## பல்லேகல கைத்தொழிற்பேட்டை



கண்டி பல்லேகல பகுதியில் அமையப் பெற்றுள்ள கைததொழில் அபிவிருத்தி சபையின் கீழான கைத்தொழிற்பேட்டையின் வாடகை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தோருடன் கலந்துரையாடினார்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் மேற்படி கலந்துரையாடல் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது, கைத்தொழிற்பேட்டையின் நில வாடகையினை ஏழு வீதத்தால் அதிகரிக்கும் வகையில் ஏற்கனவே அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, கைத்தொழிற்பேட்டையின் தொழிற்துறை நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அமைச்சர் எடுத்து விளக்கினார்.

அத்துடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழான ஏனைய கைத்தொழில் பேட்டைகளினது நிலவரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் தலைவர் நவாப் கஜாப்தீன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# சோமசுந்தரப் புலவரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு



தஙகத் தாத்தா என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவு தினம் வவுனியாவில் கடந்த 28 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

1878 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் நவாலியில் பிறந்து 1953 ஆம் ஆண்டு மரணமடைநத நவாலியூர் சோமசுந்தரப் புலவர், சிறுவர்களின் பாடல்கள் உட்பட தமிழர்களின் கலாசார விழுமியங்களை உள்ளடக்கி பாடல்களையும் கவிதைகளையும் எழுதியிருந்தார்.

சிறுவர்களை மையமாகக் கொண்டு அதிகளவான பாடல்களை எழுதியதுடன் முதன் முதல் தமிழில் சிறுவர்களுக்கான சிறுவர்களின் சல்லாப நாடகம் எனும் நாடகத்தை எழுதியமையினால் "தங்கத் தாத்தா" என சிறுவர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார்.

சோமசுந்தரப்புலவரின் நினைவு தினம், வவுனியா பஸார் வீதியில் அமைந்துள்ள அவரது சிலைக் கருகில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா வரியிறுப்பாளர் சங்கம் மற்றும் கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் சோமசுந்தரப் புலவரின் வம்சத்தைச் சேர்ந்த திருமதி மணிவண்ணன் மங்களேஸ்வரி உட்பட கலாநிதி நா.தர்மராஜா, வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் செ.சந்திரகுமார், வவுனியா கலாசார உத்தியோகத்தர். இ. நித்தியானந்தன், முன்னாள் நகர உப தலைவர் எஸ்.சந்திரமோகன், தேசமான்ய எஸ்.சிவஞானம், வவுனியா நகரசபை செயலாளர் எஸ்.சத்தியசீலன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (48)

# இளைஞர் கழக கூட்டம்

மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தின் இவ் வருடத்திற்கான முதலாவது கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு கட்டுடை சைவ வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.

இவ் வருடத்திற்கான செயற்பாடுகளைத் திட்டமிடல், புதிய நிர்வாகத் தெரிவு , பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

எனவே மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தில் புதிதாக இணைய விரும்பும் மானிப்பாய் மேற்கு ஜே/140 கிராம அலுவலகர் பிரிவைச் சேர்ந்த 13 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் இக்கூட்டத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக் கூட்டத்தில் மானிப்பாய் மேற்கு ஜே/140 கிராம சேவகர் பிரிவிற்குப்பட்ட சமூக அமைப்புகளின் தலைவர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (48)

# காணாமற்போனோர் குறித்து யாழிலும் சாட்சியங்கள் பதிவு

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு யாழ்ப்பாணத்திலும் சாட்சியங்களை பதிவு செய்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை, காணாமற் போனவர்களின் உறவினர்கள் தகவல்கள், சாட்சியங்களை வழங்க் முடியுமென ஆணைக்குழு அறிவித்துள்ளது.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கோரிகைக்கு அமைய, வடக்கு, கிழககில் 6,500 பேர் காணாமற் போயுளளதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் கடந்த மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்ததாக காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் விசாரணைகள் நிறைவடைந்ததை தொடர்ந்து முதலாவது இடைக் கால அறிக்கை தயாரிக்கப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது யாழ்ப்பாணத்திலும் விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர் இரு மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் முதலாவது அறிக்கை தயாரிக்கப்படுமென காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# சில்லறை நாணயத்தட்டுப்பாட்டால் நடத்துநர் - பயணிகள் முரண்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் சில்லறை மீதிப் பணம் கொடுப்பனவு தொடர்பாக நடத்துநர் - பயணிகள் இடையில் முரண்பாடுகள் நிலவிவருகின்றன.

சில்லறைப் பணத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதாலேயே இத்தகைய பிரச்சினைகளை எதிர் நோக்கவேண்டிய நிலை ஏற்படடுகிறது.

இவ்வாறான சம்பவமொனறு கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ். பருத்தித்துறை சேவையில் ஈடுபடும் இல.751 வழித்தட பேருந்தில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பயணி ஒருவருக்கு நடத்துநர் 5 ரூபா மீதிப்பணம் கொடுக்க வேண்டியிருந்தது பயணி தனது 5 ரூபா மீதியைத் தருமாறு வற்புறுத்திக் கேட்டுள்ளார். அதற்கு நடத்துநர் தன்னிடம் 5 ரூபா சில்லறை இல்லை எனவும் 10 ரூபா தாளைக் கொடுத்து ஐந்து ரூபா தருமாறு கேட்டுள்ளார். அதற்கு பயணி தன்னிடம் ஐந்து ரூபா இல்லை. நடத்துனரே ஐந்து ரூபாவை தரவேண்டும் என நடத்துநருடன் நீண்ட நேரம் முரண்பாட்டில் ஈடுபட்டதுடன் பின்னர் தொலைபேசியில் அந்தப் பயணி தனது சகோதரனுக்கு இவ்விடயம் தொடர்பில் தெரியப்படுத்தியதுடன் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அவரும் வந்து ஏறி நடத்துநருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதனால் பேருந்தில் பயணம் செய்த அனைவரும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர். (85)

# கஞ்சா வைத்திருந்தவருக்கு கடூழியச் சிறைத் தண்டனை

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் பகுதியில் 5 கிராம் கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவருக்கு 10000 ரூபா தண்டப்பணமும், 6 மாத கடூழியச்சிறைத் தண்டனையும் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார். மேற்படி நபர் நுகர்வுக்காக தனது பாதுகாப்பல் கஞ்சாவை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். (170)

# அமெரிக்காவை தாக்கியது பனிப்புயல்;

## ஆறு பேர் மரணம்; விமான சேவை இரத்து



தெற்கு அமெரிக்காவின் அட்லாண்டா பகுதியை பனிப்புயல் தாக்கியுள்ளது. இதன் காரணமாக 6பேர் பலியாகியுள்ளனர்.

பனிக்கட்டி மற்றும் பனி மழை டெக்சாஸ், ஜோர்ஜியா மற்றும் கரோலினா பகுதிகளுக்கு தாக்கியுள்ளது. கார்களில் வந்தவர்கள் இப்பனிப் புயலில் சிக்கி கிட்டத்தட்ட 18 மணி நேரத்திற்கு மேலாக காருக்குள்ளேயே இருந்தவாறு வீதியில் பொழுதைக் கழித்துள்ளனர். மேலும் போக்குவரத்து தொடர்பாக 791 விபத்துகள் ஏற்பட்டதாகவும் ஆனால் அதன் காரணமாக எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்புயலில் சிக்கி அட்லாண்டாவில் ஐந்து பேரும் ஜோர்ஜியாவில் ஒருவரும் இறந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அட்லாண்டாவுக்கும், ஹவுஸ்டனுக்கும் இடையேயான 1000 விமான சேவைகளை இரத்துச்செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீர்மூழ்கி கப்பலை காணவில்லை;

## ஒப்புக்கொண்டது ஜப்பான்

ஜப்பான் கடற்படைக்குச் சொந்தமான இலங்கை ரூபாவின் மதிப்பு 63 கோடி மதிப்பிலான ஆளில்லா நீர்மூழ்கிக் கப்பல் கடந்த ஆண்டு ஆய்வுப் பணியின்போது காணாமற் போனதை அந்நாட்டு அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

இதுகுறித்து ஜப்பான் பாதுகாப்பு அமைச்சக அதிகாரி. ஒருவர் கூறுகையில்:

கடற்படையின் தற்பாதுகாப்புப் படையினர் தானியங்கி மூலம் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலை, கடலின் தரைப்பரப்பு மற்றும் கடல் நீரின் வெப்பநிலை குறித்த ஆய்வுப் பணிக்காக பயன்படுத்தி வந்தனர். ஹோன்சு தீவுக்கும் ஹெக்கைடோவுக்கும் இடையே உள்ள சுகாரு நீர்சந்திப் பகுதியில் ஆய்வுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இந்த ஆளில்லா கப்பல், கடந்த மாதம் காணாமற் போனது.

3 மீற்றர் நீளம், 2 மீற்றர் அகலம் மற்றும் 5 தொன் எடை கொண்ட இந்தக் கப்பலைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டனர். 9 நாட்கள் தேடியபோதும் அதன் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தச் சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

# இந்தியாவில் எழுத்தறிவு 28கோடி பேருக்கு இல்லை

## ஐ.நா. அறிக்கை


உலகில் கல்வியறிவு பெறாதவர்கள் அதிகமுள்ளவர்கள் நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்திலுள்ளது. ஐ.நா. அறிக்கையின் படி இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை 28.7 கோடியாகவுள்ளது.

ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு சார்பில் 2013-14 அனைவருக்கும் கல்வி இயக்க கண்காணிப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் படி இந்தியாவில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 1991 ஆம் ஆண்டு 48 சதவீதமாக இருந்தது. இது 2006ஆம் ஆண்டு 63 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஆயினும் மக்கள் தொகை வளர்ச்சி காரணமாக, கல்வியறிவு பெறாத வயதுவந்தோரின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமுமில்லை.

இந்தியாவில் செல்வக் குடும்பத்தில் பிறந்த இளம் பெண்கள் உயர்கல்வி பெற்றுள்ளனர். ஆனால், ஏழைப் பெண்கள் கல்வி பெறவில்லை. இவ்விரண்டுக்கும் இடையே மிகுந்த ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. யாருக்கு அதிகம் கல்வியறிவு தேவையோ அவர்களுக்குக் கல்வி வழங்கும் இலக்கு தோல்வியடைந்துவிட்டதையே இது காட்டுகிறது.

படிப்பறிவில்லாத வயது வந்தோரில் 55.7 கோடி பேர் அதாவது 72 சதவீதம் பேர் 10 நாடுகளில் வசிக்கின்றனர். தொடக்க கல்விக்குச் செலவிடும் தொகையில் 10 சதவீதம் தரம்குறைந்த கல்வியால் வீணாகிறது. இதனால், குழந்தைகள் கல்வி பயிலவதை உறுதி செய்ய முடிவதில்லை. இதன் காரணமாக, ஏழை நாடுகளில் 4இல் ஒரு குழந்தை ஒரு வாக்கியத்தைக் கூட படிக்க முடியாத நிலையில் உள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடுவானில் மோதிக்கொண்ட சாகசம் நிகழ்த்திய விமானங்கள்



ஜப்பானில் நடுவானில் 2 விமானங்கள் மோதிக் கொண்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. ஜப்பானில் உள்ள மதுசுசிமா என்ற இடத்தில் விமானப்படைத் தளத்தில் விமான சாகசங்களை நிகழ்த்தும் ஜெட் விமானங்கள், அதற்கான பயிற்சியில் ஈடுபட்டன. அப்போது 2 விமானங்கள் திடீரென ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டன. ஆனாலும் அந்த விமானங்களில் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இரு விமானங்களும் உடனடியாக பத்திரமாக தரை இறக்கப்பட்டன. 2 விமானங்களிலும் 3 ஓட்டிகள் இருந்தனர். அவர்களும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள். ஒரு விமானத்தின் மூக்கு பகுதியும், இன்னொரு விமானத்தின் பக்கவாட்டு பகுதியும் சேதம் அடைந்திருந்தன.

நடுவானில் விமானங்கள் மோதிக்கொண்ட போதிலும் அவை வெடித்துச் சிதறாமல் இருந்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

உலகச் செய்திகள்

# மோடியைக் கொல்வதற்கு தீவிரவாதிகள் திட்டம்

## இந்திய மத்திய உளவுத்துறை தகவல்



தீவிரவாதிகளால் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடிக்கு ஆபத்து இருப்பதாக இந்திய மத்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு இன்னும் 4 வாரங்களில் வெளியாக உள்ள நிலையில், பாரதிய ஜனதா பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி, நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இதுவரையில் மும்பை, டில்லி உள்ளிட்ட பல்வேறு இந்திய நகரங்களை குறிவைத்து குண்டு வெடிப்புகள் நடாத்தி, பெருத்த உயிர்ச் சேதங்களையும், பொருட்சேதங்களையும் ஏற்படுத்திய, பாகிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிற லஷ்கர் தொய்பா தீவிரவாதிகளும், தடை செய்யப்பட்ட இந்திய முஜாகிதீன் தீவிரவாதிகளும் இதற்காக கூட்டுச்சதி செய்துள்ளனர்.

மோடியின் பிரசார கூட்டத்தில் குண்டு வெடித்து நாசவேலையை அரங்கேற்ற சதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் குறிபார்த்து துப்பாக்கிச்சூடு நடத்துவதில் நிபுணத்துவம் பெற்ற 3 பேருக்கும் மோடியை சுட்டு வீழ்த்தும் வேலை வழங்கப்பட்டுள்ளதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது.

# தனித்தெலுங்கானா மசோதாவை நிராகரித்தது ஆந்திர சட்டசபை



தனித் தெலுங்கானா மசோதாவை ஆந்திரா சட்டசபை நிராகரித்தது. மசோதாவை நிராகரிக்க ஆந்திர முதல்வர் கொண்டு வந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் தெரிவித்தார்.

மசோதா நிராகரிக்கப்பட்டதை அடுத்து, அவையை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதாகவும் சபாநாயகர் மனோகர் தெரிவித்தார்.

தெலுங்கானா மசோதா இப்போது உள்ள வடிவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து அது நிறைவேறுமானால் அரசியலிலிருந்தே விலகத் தயார் என ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி நேற்று முன்தினம் சவால் விடுத்தார்.

இதுகுறித்து அவர் ஹைதராபாத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்: "பல பெரிய மாநிலங்கள் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே பிரிக்கப்பட்டன. ஒரு மாநிலத்தைப் பிரிக்கும் போது அதற்கான காரணம் மற்றும் இலட்சியம ஆகியவை மசோதாவில் இடம் பெறுவது அவசியம். இதுபோன்ற மசோதாவையே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும். ஆனால், தற்போது ஆந்திர அரசின் பரிசீலனைக்காக அனுப்பியுள்ள தெலுங்கானா வரைவு மசோதாவில் பல்வேறு குறைகள உள்ளன. இந்த மசோதாவை இதே வடிவில் மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யட்டும் அது அங்கு நிறைவேறுமானால் நான் அரசியலில் இருந்தே விலகத் தயார்" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈரான் மீது பொருளாதார தடை

## அமெரிக்க ஜனாதிபதி எதிர்ப்பு

ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளை கொண்டு வரும் மசோதாவை நாடாளுமன்றம் கொண்டுவந்தால், அதை தனது அதிகாரத்தை பயன்படுத்தி இரத்துச் செய்வேன் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கூட்டு நாடாளுமன்ற வருடாந்திரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 'ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நமது கூட்டாளிகளுக்கு ஆதரவாகத் தொடர்ந்து செயற்படுவோம். பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்.

ஈரானின் அணு ஆயுதத் திட்டங்களை செயற்படுத்த விடாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தோம். நாம் விதித்த பொருளாதாரத் தடைகளால், அந்நாடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது. இப்போது அணு ஆயுதத் திட்டங்களை கைவிடுவது தொடர்பாக ஈரானுடன் பேச்சு நடந்து வருகிறது. இந்நிலையில், ஈரானுக்கு எதிராக புதிய பொருளாதாரத் தடைகளை அமெரிக்க நாடாளு மன்றம் விதிக கக்கூடாது. அது தொடர்பான மசோதாவை நிறை வேற்ற முற்பட்டால், ஜனாதிபதிக்கு உள்ள 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி இரத்துச் செய்துவிடுவேன். நாட்டின் பாதுகாப்பையும், நலனையும் கருதி தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

# தாய்மையை இழிவுபடுத்தும் பாடல்கள்;

## இசையமைப்பாளர் மீது வழக்கு



இசையமைப்பாளர் அனிருத் மீது வழக்கு பதிவு செய்யக்கோரி உயர் நீதிமன்றத்தில் புதிய மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஜெபதாஸ் பாண்டியன், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், இசையமைப்பாளர் அனிருத் ரவிச்சந்திரன் வெளியிட்ட இசை அல்பத்தை யூடியூபில் கடந்த 20ஆம் திகதி பார்த்தேன். இது எனக்கு அதிர்ச்சி அளித்தது. பெண்களைப் பற்றி ஆபாசமான, தரக்குறைவான, இழிவுபடுத்தும் வகையில் பாடல்கள் வந்தது எனக்கு வேதனை அளித்தது.

மேலும் தாய்மையையும் இழிவுபடுத்தியுள்ளனர். இது இளைஞர்களை தூண்டிவிடும். இதற்கு யாரிடமும் அனுமதி பெறவில்லை.

டிரைலர், சினிமா காட்சிகளுக்கு சான்றிதழ் பெறுவதுபோல இதற்கும் சான்றிதழ் பெற வேண்டும். ஆனால் அவர் எந்த சான்றிதழும் பெறாமல் இந்த இசை அல்பத்தை வெளியிட்டுள்ளார்.

எனவே அவர் மீது வழக்குப் பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி பொலிஸில் கடந்த 20ஆம் திகதி புகார் கொடுத்தேன். பொலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே அனிருத் மீது வழக்குப் பதிவு செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

# வலிகாமம் பாடசாலைகளுக்கு ஒன்பது அதிபர்கள் நியமனம்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட 9 பாடசாலைகளுக்கு கடந்த 23, 24 ஆம் திகதிகளில் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் சந்திரராசா தெரிவித்தார்.

வலிகாமம் கல்வி வலயத்தின் கீழ் தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை ஆகிய 4 கல்விக் கோட்டங்கள் உள்ளன.

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தின் கீழுள்ள தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு மங்களம் மணிசேகரனும், கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்திற்கு தர்மபுத்திரன் தயானந்தனும், அளவெட்டி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு வி.அருமைநாதனும், அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கந்தையா சிவபாலனும் நியமிக்கப்பட்டனர்.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயத்திற்கு ஜோசேப் எட்வேட் பங்கீராசு நியமிக்கப்பட்டார்.

உடுவில் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நா.தனபாலசிங்கமும், உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலைக்கு இரா.ஜெயக்குமாரும், சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்திற்கு ரிஷிக் தனஞ்செயனும் நியமிக்கப்பட்டனர்.

சங்கானைக் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்திற்கு கு.முருகானந்தன் நியமிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## கூட்டமைப்புடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் சதிசெய்கிறது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தை இலக்கு வைத்து சதித்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது. இந்தச் சதித்திட்டத்தின் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 30 வருட போரில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான அரசாங்கத்தின் புள்ளி விபரங்களுக்கு பதிலாக தனியான நிறுவனம் ஊடாக புள்ளிவிபரங்களை திரட்டுமாறு கோரி வருகிறது என அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் தெரிவித்தார்.

### அரசியல்...

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்துமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு அரசாங்கமே அழைப்பு விடுத்திருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் அரசாங்கம் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையே இதற்கான காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அரசியல் சுயலாப நோக்கில் செயற்படாவிட்டால், சவால்களை எதிர்கொள்ள அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க ஐக்கிய தேசியக் கட்சித் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். தற்போதைய ஆளும் கட்சி எதிர்க்கட்சியாக இருந்திருந்தால் ஒரு வாரத்திற்கு ஒரு தடவை ஜெனிவா சென்று முறையிட்டிருப்பார்கள்.

கடந்த 2008, 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச் செயல் குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை.

எனினும், இந்த அரசாங்கம் அமெரிக்கா பிரித்தானியா மட்டுமன்றி இந்தியாவையும் இப்போது பகையாக்கிக் கொண்டுள்ளது என்று அரசு மீதும் அவர் குற்றம் சுமத்தினார். உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது அவசியமானது எனவும் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

### வடமாகாண...

பாரிய கற்கள் இருப்பதால் அங்கு நீர்ப்பற்றாக்குறை காணப்படுவதாக கூறப்படுகிறது.

மாங்குளத்தில் நீர் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் இருக்குமானால் வடமாகாண சபை மற்றும் அதனுடன் தொடர்புடைய திணைக்களங்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து மாங்குளத்திற்கு கொண்டு வர முடியும். கொரிய நிபுணர்கள் மாங்குளத்தில் நீர் மற்றும் கட்டட நிர்மாணங்கள் பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தமது ஆய்வினை பூர்த்தி செய்ததும் அது பற்றிய முழுமையான அறிக்கையை இன்னும் ஓரிரு மாதங்களில் என்னிடம் கையளிப்பார்கள்.

அவ்வாறு தென் கொரிய நிபுணர்களினால் கையளிக்கப்படும் அறிக்கையில் மாங்குளத்தில் வடமாகாண சபையை நிர்மாணிப்பதற்குரிய சாதகமான விடயங்கள் தெரிவிக்கப்பட்டால் வட மாகாண சபையை மாங்குளத்திற்கு இடமாற்ற நடவடிக்கையை மேற்கொள்வோம். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டம் யுத்தத்தினால் கூடுதலான இழப்புக்களை சந்தித்த மாவட்டமாகும். இந்த மாவட்டத்திற்கு மாகாண அமைச்சர் ஒருவரை நியமிக்காவிட்டாலும் பிரதி தவிசாளர் பதவியை இந்த மாவட்டத்திற்கே வழங்கியுள்ளோம். வட மாகாண சபை ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

### வடக்கு...

எடுக்க வேண்டுமென கட்சி வலியுறுத்தியுள்ளது. அண்மையில் வட மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் இதனை அடிப்படையாகக் கொண்டு மாகாணசபையை கலைக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென அண்மையில் வட மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

தேசிய நோக்கங்களுக்கு புறம்பான வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும், விடுதலைப் புலிகளின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்காக பிரசாரத்தில் ஈடுபடும் அனைத்து இயக்கங்கள், அமைப்புக்களும் தடை செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## சனசமூகநிலைய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் கொட்டடி சன சமூக நிலையத்தின் 2014 ஆம் வருடத்திற்கான முதலாவது நிர்வாக உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நிகழ்வு இன்று மாலை 7.00 மணியளவில் சீனிவாசகம் வீதியில் அமைந்துள்ள நிலையத்தில் நிலையத் தலைவர் நா. தனேந்திரன் (ஜே.பி.) தலைமையில் இடம்பெறவுள்ளது. (05)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவின் ஆயுர்வேத வைத்திய பாதுகாப்பு சபையினது பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று பி.ப. 2.00 மணியளவில் யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்திய கலாநிதி டக்ளஸ் பிறிட்டோ தலைமையில் நடைபெறவுள்ளது. (05)

### நாகர்கோவிலில்...

காயமடைந்த நிலையில் அந்நிறுவன முதலுதவிப் படையினால் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (இ,பா,116)

### பிரதம...

நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ். வந்த அவர், யாழ். நீதிமன்ற வளாகத்திற்கு வருகை தந்தபோது அவருக்கு சிறப்பாக வரவேற்பு வழங்கப்பட்டது. இதனையடுத்து யாழ். நீதிமன்றத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த நீதவான்களுக்கான செயலமர்வில் பங்கெடுத்துக் கொண்டார்.

இந்தச் செயலமர்வு வட மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் தலைமையில் நடைபெற்றது. (பா)

### மீண்டும்...

இதேவேளை இந்த மீனவர்கள் மீது ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட இந்த 38 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதனையடுத்து அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (பா,இ)

# சட்டமாணி கற்கைநெறி தெரிவுப் பரீட்சை நாளை

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் சட்டமாணி பட்டக் கற்கைநெறி 2013/2014 கல்வியாண்டிற்கான மாணவர்களைத் தெரிவுசெய்வதற்குரிய தெரிவுப்பரீட்சை நாளை பி.ப. 1.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை பின்வரும் பரீட்சை மண்டபங்களில் நடைபெறவுள்ளது என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இராமநாதன் மண்டபம் - யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீட மண்டபம் - யாழ். பல்கலைக் கழகம், புதிய கலைப்பீட மண்டபம் - யாழ். பல்கலைக்கழகம், முகாமைத்துவ மண்டபம் I - யாழ். பல்கலைக்கழகம், முகாமைத்துவ மண்டபம் II - யாழ். பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலைய பரீட்சை மண்டபங்கள்.

# அரிசிக்கு வரிசையில் நிற்கவேண்டிய அவலம்

அரிசிக்கு வரிசையில் நிற்க வேண்டிய அவலம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கின்றது.

கடந்தகால போர் காரணமாக அன்றைய கால கட்டத்தில் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடுகள் நிலவி வந்தது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் நிவாரணங்கள் அன்றைய காலங்களில் வழங்கப்பட்டு வந்தன.

இந்தக் காலப் பகுதியில் பல நோக்குக் கூட்டுவுச் சங்கங்களிற்கூடாக மக்களுக்கான நிவாரணங்களும் வழங்கப்பட்டு வந்தன. இதன்போது மக்கள் நீண்ட வரிசையில் நின்று அரிசி உள்ளிட்ட நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டனர்.

போர்க் காலப்பகுதியில் அரிசிக்கு வரிசையில் நின்றது போன்றதொரு நிலை மீண்டும் யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டிருக்கின்றது. பருவ மழை உரிய காலப்பகுதிகளில் பெய்யாததன காரணமாக பெரும்போக நெற்செய்கைகள் நீர் இனறி அழிவடைந்ததுடன் விவசாயிகளும் பெரும் நஷ்டங்களை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் அரிசியின் விலையும் சடுதியாக அதிகரித்துக்கொண்டது. ஆனால், அரச நிறுவனமான சதொச போன்ற நிறுவனங்களில் அரிசியின் விலை ஏனைய கடைகளை விட விலை குறைத்து விற்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கடைகளில் விற்கப்படும் அரிசிகள் ஓரிரண்டு நாட்களிலேயே மக்களால் கொள்வனவு செய்யப்பட்டு விடுகின்றன. இதனால் அரிசி விற்கப்படும் இவ்வாறான ஓரிரு நாட்களில் நுகர்வோர் நீண்ட வரிசையில் நின்று அரிசியை வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. (எஸ்.பி)

### உற்பத்தி...

விரும்புகின்றேன். இராணுவத்தினர் விவசாய உற்பத்திகளை குறைந்த விலையில் விற்பனை செய்வதாக கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற ஈ.பி.டி.பி.யின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போது, அவர்களால் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனை அறிந்துகொண்டு தீர்வு காண்பதற்காக நான் உங்களை அழைத்தேன்.

இராணுவத்தினரின் நோக்கம் மக்களுக்கு சேவை செய்வதும் மக்களைப் பாதுகாப்பதும் ஆகும். தற்பொழுது இராணுவ முகாம்களை அகற்றி மக்களுடைய வீடுகளையும் விவசாய நிலங்களையும் ஒப்படைத்து வருகிறோம்.

இராணுவத்தினர் அகற்றப்பட்டவுடன் களவுகள் இடம்பெறுவதாக மக்கள் எமக்கு தெரிவிக்கின்றார்கள். அது சிவில் நிர்வாகப் பிரச்சினை. அதனைப் பார்க்க வேண்டியது பொலிஸார். இருந்தும், நாங்கள் இராணுவத்தை இரவு வேளைகளில் வீதி ரோந்துகளில் ஈடுபடுத்தியுள்ளோம்.

விவசாயிகளின் உற்பத்திகளை சந்தையில் விற்பனை செய்வதற்கும் இராணுவத்தினர் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தையில் விற்பனை செய்யாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இராணுவுத்தினருக்கு தேவையான பொருட்களை மக்களிடம் பெற்று அதில் பயன்பெற வேண்டும்.

இந்த நிலையில், உடனடியாக 300 லீற்றர் பசுப்பாலை 60 ரூபா படியும் முட்டைகள், இறைச்சி, கோழிகள், சிரட்டைகள் ஆகியவற்றில் 75 சதவீதமானவற்றை கொள்வனவு செய்வதற்கு தயாராக உள்ளோம். மேலும், 10 சலவைத் தொழிலாளிகளும் 20 சிகை அலங்காரத் தொழிலாளிகளும் எமக்கு தேவையாக உள்ளார்கள். இவை அனைத்தையும் நாம் தமிழ் மக்களிடம் இருந்தே எதிர்பார்க்கிறோம்.

டெங்கு ஒழிப்பு, பார்த்தீனிய ஒழிப்பு ஆகியவற்றை விவசாய அமைப்புக்களுடனும் பொது அமைப்புப் பிரதிநிதிகளுடனும் இணைந்து மேற்கொள்ள இராணுவத்தினர் தயாராக இருக்கின்றார்கள். எனவே, மக்களுக்குச் சேவையாற்ற நாங்கள் இருக்கின்றோம் என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்), வலி. மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. மேற்கு இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பருத்தித்துறை பிரதேச இணைப்பாளருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன், பிரதேச சபையின் உறுப்பினர் க.சந்திரபோஸ், வலி.கிழக்கு விவசாய அபிவிருத்திச் சபைத் தலைவர் அ.தம்பிநாதன், வலி. கிழக்கு விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நாளாந்தம் 60 பேர் மரணம்

# புகைபிடிப்பதால் விபரீதம்

## சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் புகைத்தலினால் மாத்திரம் ஒரு நாளைக்கு 60 பேர் உயிரிழப்பதுடன் வருடமொன்றில் 20 ஆயிரம் பேரளவில் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, நாடு தழுவிய ரீதியில் கடந்த வருடம் 9 சதவீதத்தினால் புகைப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் நாடு தழுவிய ரீதியில் ஒரு நாளைக்கு ஆயிரம் பேரளவில் வெவ்வேறு நோய்களினால் உயிரிழக்கின்றனர். அவற்றில் 60 சதவீதமானவர்கள் அதாவது 600பேரளவில் எச்.டீ. நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என இனங்காணப்பட்டுள்ளனர்.

குறித்த எச்.டீ. நோயாளிகளில் 6 சதவீமான நோயாளிகள் புகைத்தலினால் பாதிக்கப்பட்டவர்களென்பது தெரியவந்துள்ளது. அதாவது 'சுமார் 60பேர் புகைத்தலினால் ஒரு நாளுக்கு உயிரிழக்கின்றனர்.

இதேவேளை புகைத்தலினால ஒரு வருடத்திற்கு 20,000 பேர் உயிரிழக்கின்றனர். ஆகவே, எச்.டீ நோயென்பது புலன் உணர்வு குறைவு மற்றும் மரபணு சம்பந்தப்பட்ட விடயங்களினால் ஏற்படுகின்ற நோயாகக் காணப்படுகிறது. இதனடிப்படையில் புகைப்பவர்களும் குறித்த நோயிற்கு இலக்காகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கடந்த வருடம் சிகரெட் புகைப்பவர்களின் எண்ணிக்கை 9 சதவீதமாக குறைவடைந்துள்ளது மேலும், கடந்த வருடம் ஆகஸ்ட் மாதமளவில் 7 சதவீதமளவில் புகைப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள நிலையில் கடந்த வருடம் டிசம்பர் மாதமளவில் அச்சதவீதம் 9 சதவீதமாக காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

கடந்த வருடம் நவம்பர் மாதமளவில் சிகரெட் ஒன்றின் விலை 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமையே அதன் பிரதான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் சிகரெட்டின் விலை அதிகரிக்கப்பட்டபின்பும்கூட புகைப்பவர்கள் சிகரெட்டை விட்டுவிடுவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் சிகரெட்டை இளைஞர்களைவிட வயோதிபர்களே அதிகமாக புகைக்கின்றனர். எனினும் தற்போதைய சின்னஞ்சிறார்கள் பாடசாலையில் கூட சிகரெட் புகைக்கும் நிலை உருவாகியுள்ளது. அது மாத்திரமின்றி மேலத்தேய பெண்களைப்போல் இலங்கையில் வாழும் பெண்கள் கூட புகைத்தலில் ஈடுபட்டு வரும் நிலை காணப்படுகின்றமை துரதிரஷ்டவசமானது.

எனவே, சிகரெட் புகைப்பது மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் பழக்கமாகும். ஆகையால் சிகரெட் புகைப்பவர்கள் புகைத்தலை நிறுத்த வேண்டுமென்பதே சுகாதார அமைச்சின் வேண்டுகோளாக உள்ளது.

# தமிழ் மக்கள் விவகாரத்தி... தோல்வி கண்டுள்ளது அ...

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் மக்கள் விவகாரத்தில் அரசாங்கம் தோல்விய... துள்ளதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர... திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் அரசாங்கம், தமிழ் மக்களை மேலு... மைப்படுத்தியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். தேசிய ... பிரச்சினை விவகாரம் தீர்மானமிக்கதொரு தருணத்தை எட்டி... தாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படவி... என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காணாமல் போனவர்கள் ... பான பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை, ஏனைய ... உரிமைகள் குறித்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட... என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை ... முழுதாக வீழ்ச்சியடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியு...

யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் தமிழர் பிரச்சினைக்கு ... காண முனைப்பு காட்டியிருந்தால், வட மாகாணசபையில் ... குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணை தொடர்பான ... னங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காது என அவர் தெரிவித்துள்... அமெரிக்கா இலங்கை மீது பிரயோகித்து வரும் அழுத்தா... முறியடிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு... கருணை மனு மீது விவாதம்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை ரத்து செய்யக்கோரும் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரது மனு மீதான வாதம் உச்ச நீதிமன்றத்தில் முடிவடைந்துள்ளது.

கருணை மனு மீதான முடிவு எடுப்பதில் கால தாமதம் செய்ததால் வீரப்பன் கூட்டாளிகள் நால்வர் உள்பட 15 பேரின் தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் அண்மையில் ரத்து செய்தது.

இதைத் தொடர்ந்து முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரும் தங்களது தூக்குத் தண்டனையை ரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது. ஆஜரான மத்திய அரசின் வழக்கறிஞர், அரசு தரப்பு வாதங்களை முன்வைக்க கால அவகாசம் கேட்டார். இதை நீதிபதிகள் நிராகரித்தனர். இதனிடையே, பேரறிவாளன் உட்பட 3 பேரின் சீராய்வு மனு உச்ச நீதிமன்றத்தில் நேற்று ... ணைக்கு வந்தது.

அப்போது, முருகன் ச... வழக்கறிஞர் ராம்ஜெத்... னியும், பேரறிவாளன், சா... ஆகியோர் சார்பில் வழ... ஞர் யுக்முக் சவுத்ரியும் ... டனர்.

மரண தண்டனை வி... பட்டு 16 ஆண்டுகள் மு... சிறையில் இருக்கிறார் ... ராம்ஜெத்மலானி வாதி... இதையடுத்து, மூன்று ... சார்பில் ஆஜரான வழக்க... களின் வாதம் முடிவடை... இதைத் தொடர்ந்து ... விசாரணையை பெப்ர... ஆம் திகதிக்கு உச்ச நீ... ஒத்திவைத்தது. அன்றை... மத்திய அரசு சார்பில் ... நடக்கிறது.

# சட்டவிரோத ஆட்கடத்தல் குழு பிரித்தானியாவில் சிக்கியது

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கைக் குழு ஒன்றுக்கு பிரித்தானியாவில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐந்து பேரைக் கொண்ட குற்றவாளி குழு ஒன்றே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் இலங்கையர்களை பிரித்தானியாவிற்கு கடத்திச் சென்றதாக குறித்த குழு மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்பட்டவர்களில் நான்கு பேர் இலங்கையர்கள் எனவும் ஒருவர் பிரித்தானியர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தலா 4500 ஸ்ரெலிங் பவுண்ட்கள் அறவீடு செய்து இலங்கையர்கள் கடத்தப்பட்டுள்ளனர். எவ்வாறெனினும், இந்த கடத்தல



முயற்சிகளில் பலவற்றை பிரித்தானிய எல்லைப்பாதுகாப்புப் பிரிவினர் முறியடித்துள்ளனர்,

பிரித்தானியாவிற்குள் பிரவேசித்த சிலர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வட அமெரிக்காவிற்கு பயணம் செய்துள்ளனர்.

37 வயதுடைய சுதர்சன் ஜயகொடி, 42 வயதான சுப்ரமணியம் விக்னராஜா, 39 வ்யதான கமலநேசன் கந்தையா மற்றும் சௌந்தரநாயகம் உவைஸ் ஆகியோர் இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 46 வயதான அமர்ஜித் முதாஹர் என்ற பிரித்தானிய பிரஜை ஒருவரும் தண்டிக்கப்பட்டுள்ளார். ஐந்து மற்றும் நான்கு ஆண்டு சிறைத்தண்டனை இவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

# உகண்டா பாதுகாப்பு அமைச்... நேற்று யாழ்ப்பாணம் விஜய...

(யாழ்ப்பாணம்)

உகண்டா பாதுகாப்பு அமைச்சர் அடங்கிய உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழுவினர் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

காலை பலாலி விமான நிலையம் வந்து சேர்ந்த குழுவினர் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேராவைச் சந்தித்து யாழ்ப்பாண நி... கள் குறித்து கலந்துரையாட...

காலை 9.30 மணியள... குழுவினர், நல்லூர் கந்தசு... கோவிலில் பூசை வழிப... ளில் ஈடுபட்டதுடன், ய... கோட்டையையும் பார்வை... துடன் யாழ். பொது நூலக... கும் விஜயம் மேற்கொ... ருந்தனர். யாழ். பொது நூ... தின் அனைத்துப் பிரிவுகளை... குழுவினர் பார்வையிட்ட...

# துறையூரில் புதிய மீன் சந்தை இன்று திறப்பு விழா

(வேலணை)

இரண்டு கோடி ரூபா செலவில் நவீன வடிவில் புதிதாக கட்டப்பட்ட வேலணை துறையூர் மீன் சந்தை இன்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,. வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட திறந்து வைக்கவுள்ளார்.

வேலணைப் பிரதேச சபைத்தலைவர் சின்னையா - சிவராசா (போல்) தலைமையில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. 'புறநெகும' திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் நவீன வடிவில் அமைக்கப்பட்ட இம்மீன் சந்தையும் அதனோடு இணைந்த வீதியுமே திறந்துவைக்கப்படவுள்ளது. இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான வி.கே. குகேந்திரன் (ஜெகன்) கலந்துகொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக வேலணைப் பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி கலந்துகொள்வார்.

# இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக அரசின் ஆதரவு தொடரு...

## தமிழக ஆளுநர் தெரிவிப்பு

இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக அரசின் உறுதியான ஆதரவு தொடரும் என்று தமிழக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனவெறிப் போருக்குப் பிறகு இலங்கைத் தமிழர்கள் அவர்கள் பிறந்த மண்ணிலேயே மனிதாபிமானமற்ற முறையில் இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்தப்படுவதும், இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொலைகளுக்குரிய விசாரணைகளை இலங்கை செய்யத் தவறியதும், இம்மாநிலத்தில் உணர்ச்சிகரமான பிரச்சினைகளாக உள்ளன.

சிறுபான்மைத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட மனிதாபிமானமற்ற கொடுமைகளுக்கு இலங்கை அரசைப் பொறுப்பேற்கச் செய்யவும், இலங்கைத் தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமையையும், அடிப்படை உரிமைகளையும் பெற்றுத்தரவும், நான்கு முறை இம்மாமன்றம் தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது.

முதல்வர் ஜெயலலிதா, பாரதப் பிரதமருக்கு இப்பிரச்சினை குறித்து வலியுறுத்தி பலமுறை கடிதம் எழுதியுள்ளார்கள். ... வர் தமிழ் மக்களின் ... தளிப்பான உணர்வு நி... மத்திய அரசுக்குத் ... படுத்திய பின்னரும், ... வெளியுறவுத்துறை அ... இலங்கையில் நடை... காமன்வெல்த் அமைப்பின... ப்பு நாடுகளுக்கான தலை... களின் மாநாட்டில் கல... கொண்டுள்ளார்.

இலங்கையில் உள்ள ... பான்மைத் தமிழர்களுக்கு ... மைகளைப் பெற்றுத்தருவத... இந்த அரசு உறுதியான ... வைத் தொடர்ந்து அளி... என்று ஆளுநர் ரோசய்ய... உரையில் தெரிவிக்கப்ப... ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்